
# திராவிடநாடு

மலர் 6 | 29-6-47 | இதழ் [illegible]



"திராவிடநாடு திராவிடருக்கே"

# ★ தமிழர் பண்பாடு ★

—ஃ—

'ஆரியர்—திராவிடர்' என்று அர்த்தமற்றக் கூச்சலிடுகிறோம் என்று அன்பர்கள்சிலர் எண்ணுகிறார்கள்—இன்னமும், ஏதோ ஒரு காரணத்துக்காக, வேண்டுமென்றே, நாம் ஒரு கற்பனையை, இட்டுக்கட்டி எடுத்து வந்திருக்கிறோம் என்று எண்ணுகிறார்கள்.

திராவிடர், தனி இனம், தனிப் பண்புள்ளவர்கள், என்பது தெளிவாகத் தெரியமுடியாத அளவுக்கு, வேறுபண்பாடுகள், இதனுடன் கூட்டிக் கலக்கப்பட்டதால், நாம், ஆரியர்—திராவிடர் என்று பேசுவது, சிலருக்கு அர்த்தமற்றதாகத் தோன்றுகிறது.

நாமாவது, அரசியல் கட்சிக்காரர்கள்—எனவே நமது பிரசாரத்துக்கு நோக்கம் தவறானதாக, ஏதேனும் கற்பித்து, பிரச்சினையின் தூய்மையைக் கெடுக்கமுடியும் சிலரால்.

அரசியலில் கலந்து பணிபுரியாமல், கட்சிப்பூசல்களுக்கு அப்பால் நின்று, ஆராய்ச்சிக் கூடத்தில் அமர்ந்து, பல்வேறு விஷயங்களை, ஆராய்ந்து, கருத்துரைவழங்குபவர்கள், இந்தப்பிரச்னையைப்பற்றி, கற்பனையாக ஏதும் கூறவேண்டிய அவசியமில்லையல்லவா? அத்தகைய அறிஞரின் அபிப்பிராயத்தை இங்கு திரட்டித் தருகிறோம், எமது பேச்சுக்குப் பக்கபலம் தேட அல்ல, பிரச்னை, தூய்மையானது, நல்லெண்ணமுடையோர் அனைவராலும் கூர்ந்து கவனிக்கப்படவேண்டிய முக்கியத்துவம் வாய்ந்தது — அலட்சியப்படுத்திவிடக் கூடியதல்ல என்பதை விளக்க.

தமிழருக்கு இருந்த கோட்பாடுகள் வேறு—பின்னர் அவர்களிடம் புகுத்தப்பட்ட கோட்பாடுகள்வேறு.

இதனை, சட்ட அறிஞர், ஜான்டிமேணி என்பார், விளக்கியுள்ளார். அது இது.

தோழர் ஜான்டிமேணி என்னும் சட்ட நிபுணர் தம்மால் எழுதப்பட்ட "இந்துலா அண்டு யூசேஜ்" (இந்து சட்டமும் ஆசாரமுறையும்) என்ற புத்தகத்தில் தென்னிந்தியாவின் ஆரிய திராவிட சித்தாந்தம் பற்றி விவரித்திருப்பதன் சுருக்கம் வருமாறு:—

"தென்னிந்தியாவில் குடியிருந்து வருபவர் அனைவரும் திராவிட வகுப்பினர் தான். அவர்கள் பூர்வோத்திரம், நிறம், பாஷை, வர்க்கம் ஆகியவைகளில் ஆரியர்களிலிருந்து பெரிதும் வேறுபட்டவர்கள். ஆரியர்கள் தென்னிந்தியாவுக்குள் முதல்முதலாக எப்போது புகுந்தார்கள் என்பதற்குநிச்சயமான ஆதாரம் எதுவும் இல்லை. கிறிஸ்துவுக்கு வெகு காலத்திற்கு முன்பு ஆரியர் தமிழ்நாட்டுக்குள் புகுந்திருக்கலாம். தென்னிந்தியாவில் முதல் முதலாகக் குடியேறிய ஆரியர்கள் யாவரும் தபசிகள்தான். அவர்கள் ரிஷிகள்என்று அழைக்கப்பட்டார்கள். அவர்கள் தான் முதன்முதலாகத் தமிழ் நாட்டில் ஸ்திரமாகக் குடியேறினார்கள். அவர்கள் தமிழ் நாட்டைப் போரிட்டுஜெயிக்கவில்லை. ஆனால் அங்கு ஒண்டிப்பிழைத்து வந்தார்கள்.

## ஆரியர் ஆசாரத்தைத் தமிழர் ஏற்கவில்லை

அக்காலத்தில் தென்னிந்தியர் ஆரியர்களிடத்தில் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொண்டதில்லை. அவர்கள் காலப்போக்கில் அரசியல் ஆதிக்கம் பெற்றபிறகு தான், திராவிடர்அவர்கள் சூழ்ச்சிக்குள் அகப்பட்டுப் போயினர். தென்னிந்திய ஜனத்தொகையில் தற்காலம் 100-க்கு 3-பேர் வீதமே பிராமணர்களாயிருக்கிறார்கள். இந்தப் பிராமணர்கள்தான் ஆரியர் எனப்படுவோர். ஏதோ சொற்ப வைசியரும், க்ஷத்திரியரும் தென்னாட்டில் இருக்கலாம். ஆனால் அவர்களின் எண்ணிக்கை மிக மிக அற்பமானது. பிராமணர்கள் பிராமணர்களல்லாத தென்னிந்திய பெருங்குடி மக்கள் அனைவருக்கும் ஜாதி முறை கற்பித்து அவர்களைத் தங்களைவிட கீழ்ஜாதியார் என்று தீர்த்து அவர்களுக்குத் தங்கள் விருப்பப்படி "சூத்திரர்" என்று பெயரிட்டுக் கொண்டார்கள். உண்மையில் அந்நியர்களாகிய ஆரியர்களுடையசட்ட திட்டங்களையும் ஆசார அனுஷ்டானங்களையும் தென்னிந்தியர் ஏற்றுக் கொண்டதில்லை.

பதினெட்டாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் மதுரையில் வசித்து வந்த பூஷே என்ற பாதிரியார், தமிழர்களுக்குச் சட்ட சாஸ்திரப் புஸ்தகங்கள் இருந்ததில்லையென்றும், புராதன ஆசார அனுஷ்டான (மாமூல்) வழக்கங்களை அனுசரித்தே அவர்கள் நடந்து கொண்டார்கள் என்றும் எழுதிவைத்திருக்கிறார். அந்தகாலத்திய தென்னிந்தியரைப் பற்றி எழுதிய அப்பேடுபே என்பவர் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:—

தமிழ்நாட்டில் குடிகளின் சிவில் கிரிமினல் விவகாரங்கள் சம்பந்தமாகச் சில சட்ட சாஸ்திரங்கள் இருக்கின்றன. ஆனால் தமிழ்மக்கள் அவைகளை லட்சியம் செய்வதில்லை. எனவே தமிழர்களுடைய சிவில் கிரிமினல் வழக்குகள் சாதாரண பகுத்தறிவுப்படியும், கர்ணபரம்பரைப் பழக்கவழக்கப்படியும் தீர்த்துவைக்கப் படுகின்றன.

தோழர் எம். லியோன் சார்க் என்ற அறிஞர், புதுச்சேரி கோர்ட்டின் சென்ற நூற்றாண்டின் தீர்ப்புகளைப் பார்த்தால் தமிழர்களுக்கு அக்காலத்தில் சமஸ்கிருத சட்ட ஞானமில்லையென்று தெரிகிறது. தமிழர்கள் ஸ்ரீதனம், சபிண்டா முதலிய சாதாரண சமஸ்கிருத வார்த்தைகளுக்கு அர்த்தமே தெரிந்திருந்ததில்லை என்று தெரிகிறது. பிற்காலத்தில் நாளாக நாளாக கோர்ட்டு வழக்குகளில்பிராமணப் பண்டிதர்களின் சாஸ்திர அபிப்பிராயம் கேட்க ஆரம்பித்தார்கள். அதன் பிறகே ஆரிய சாஸ்திரங்கள் தமிழர் சட்டங்களில் கொஞ்சம் கொஞ்சமாக இடம்பெறச்சந்தர்ப்பம் ஏற்பட்டு வந்தது என்று எழுதியிருக்கிறார்.

இறந்தவர்கள் உயிரோடிருக்கும் தங்கள் சுற்றத்தார்களுக்கோ வேறு எவருக்கோ தீங்கு செய்யமுடியும் என்ற நம்பிக்கை தமிழர்களுக்குக் கிடையாது. இறந்தவர்கள் தங்களுக்கு நன்மை செய்யமுடியும் என்ற நம்பிக்கையும் தமிழரிடம் இருந்ததில்லை. 'புத்' என்னும் நரகம் உண்டு என்பதைத் தமிழர் நம்பியதில்லை. புத்திரன் தன் பெற்றோர்களை நரகத்திலிருந்து காப்பாற்றுவான் என்ற கோட்பாடு ஆரியர்களுடைய வியாக்[illegible] பிரதாபம் பெற்றது என்பது தமிழர் கொள்கையல்ல. கல்யாணத்[illegible] பிரகாரம் [illegible] ஆரியர்கள்தான்; தமிழரல்ல

✲

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

விலை 2 அணா **திராவிடநாடு** ஆண்டுச்சந்தா ரூ 7

# கபிலர்

—(0)—

பார்ப்பன மாந்தர்காள்!
பசர்வது கேண்மின்
இறந்தவராயுமை
யில்லிடையிருத்திப்
பாவனை மந்திரம்
பலபட உரைத்தே
உமக்கவர் புத்திரர்
ஊட்டினபோது
அடுபசியாற்குலைந்
தாங்கவர்மீண்டு
கையேந்தி நிற்பது
கண்டதார் புகல்வீர்
அருந்திய உண்டியால்
யார்பசி கழிந்தது?

*

நால்வகைச் சாதியிந்
நாட்டில் நீர் நாட்டினீர்
மேல்வகை கீழ்வகை
விளங்குவது ஒழுக்கால்
பெற்றமும் எருமையும்
அவ்விரு சாதியில்
ஆண்பெண் மாறிக்
கலந்து கருப்பெறல்
கண்டதுண்டோ,
ஒருவகை சாதியா
மக்கட் பிறப்பில்
இருவகையாக நீர்
இயம்பிய குலத்து
ஆண்பெண் மாறி
அணைதலும் அணைந்தபின்
கருப்பொறை யுயிர்ப்பதும்
காண்கின்றிலிரோ
எந்நிலத்து எந்தவித்து
இடப்படுகின்றதோ
அந்நிலத்து அந்தவித்து
அங்குரித்திடு மாதலால்
மாறி வேறாகும்
வழக்கமொன்றிலையே.

# இலட்சிய விளக்கம்

## திராவிடநாடு திராவிடருக்கே

இது ஒரு கட்சியின் முழக்கமல்ல; ஒரு இனத்தின் இருதய கீதம்! மூலாதார உண்மை. எங்கும் எந்த வகையான மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. இந்தக் கருத்தை, நாம் கூறுகிறோம் என்ற காரணத்தால், எதிர்க்கத்தான் வேண்டும் என்று எண்ணுபவர்கள், அலட்சியப்படுத்துபவர்கள், நமக்கல்ல, நாட்டுக்குக் கேடு செய்கிறார்கள், தங்கள் இனத்துக்குத் துரோகம் செய்கிறார்கள்.

சின்னஞ் சிறுநாடுகள், இயற்கை வளமற்ற நாடுகள், இரவல் பொருளில் வாழ்வு நடத்தவேண்டிய நாடுகள் கூட, தனி அரசுரிமைபெற்று விட்டன. இங்கோ, இலக்கியச் செறிவை, இரு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெற்று வாழ்ந்து வந்த நாடு, இன்று மற்ற நாட்டுடன் பிணைக்கப்பட்டு, பிடியாளாகிக் கிடக்கிறது. தங்கள் வாழ்நாளில் தாய் நாட்டின் மீது பூட்டப்பட்டுள்ள தளைகளை உடைத்தெறிவதை, பெரும் பணி என்று கருதும் வீரர்களுக்கு அழைப்பு விடுகிறோம்; திராவிடநாடு திராவிடருக்கே, என்பதை மூலை முடுக்கிலுள்ளோரும் அறியச் செய்யுங்கள்—அணிவகுப்பில் சேருங்கள் என்று கூறுகிறோம்.

நமது கொள்கையின் மாசற்ற தன்மையை, திட்டத்தின் அவசியத்தை, இலட்சியத்தின் மேன்மையை, அனைவரும் அறியும்படி, விளக்க, இந்த ஜூலை 1-ந்தேதி, திராவிடப் பிரிவினை தினமாகக் கொண்டாடத் திராவிடர் கழகம் ஏற்பாடு செய்திருக்கிறது. திராவிட நாடு திராவிடருக்கு, என்ற திட்டத்தை, நாம் அர்த்தமற்றுத் தீட்டிக் கொள்ளவில்லை—தக்க—மறுக்கமுடியாத காரணங்கள் உள்ளன.

கண்டனம் செய்வோர், கேலி செய்வோர், அலட்சியமாகக் கருதுபவர், அசட்டை செய்பவர், யாராயினும் சரியே, திராவிடநாடு திராவிடருக்கே என்பதற்காக நாம் கூறும் காரணங்களை கொஞ்சம், ஆர அமர இருந்து யோசித்துப் பார்த்துவிட்டு ஒரு முடிவுக்கு வரும்படி கேட்டுக் கொள்கிறோம். பன்முறை நாம் கூறியிருக்கிறோம் இக்காரணங்களை, இம்முறை, இதற்கென ஓர் நாள் கொண்டாடும் சமயத்திலே நாட்டு மக்களுக்குமீண்டும் ஓர் முறை, அதேகாரணங்களைக் கூறுகிறோம்;

1. இந்தியா என்பது ஒரு கண்டம். எனவே அது பல நாடுகளாகத்தான் பிரிக்கப்படவேண்டும். ஐரோப்பாக் கண்டத்தில் 32 தனித்தனி நாடுகள் உள்ளன. ஐரோப்பா முழுவதும் ஒரு குடைக் கீழ் இருக்கவேண்டுமென யாரும் கூறவில்லை. இந்தியாவும் ஒரே குடையின் கீழ் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

2. இந்தியா, பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுவதற்கு முன்பு தனித்தனி ஆட்சி கொண்ட 56 தேசங்கள் உள்ள கண்டமாகத்தான் இருந்து வந்தது. பிரிட்டிஷார் தமது ஆட்சி சரியாக நடக்கச் சௌகரியம் தேடிக் கொள்ளவே இந்தியாவை ஒரே நாடு என்று கருதினர், மற்றவரையும் கருதும்படிச் செய்தனர்.

3. மதம், மொழி, கலை, மனோநிலை ஒரு குடிமக்கள் என்ற உணர்ச்சி வரலாற்று பந்தத்துவம் இவைகள் தான் இன இயல்புகள். இந்த முறையில் பார்த்தால் இந்தியாவில் தனித்தனி இனங்கள் பல உள்ளன. அவைகளை மூன்று பெரும் பிரிவுகளாகக்கொள்ளலாம் திராவிடர், முஸ்லீம், ஆரியர் என்று. இந்த மூன்று இனங்களில் திராவிடரும் முஸ்லீமும் அதிகமான வித்தியாசம் இன இயல்புகளில் இல்லாதவர்கள். ஆரிய இன இயல்புகளுக்கும் மற்ற இரு இன இயல்புகளுக்கும் துளியும் பொருத்தம் கிடையாது. பகைமை பெரிதும் உண்டு. இந்தத் தனித்தனி இன இயல்புகள் இருப்பதால், இனவாரியாகஇந்தியா பிரிக்கப்பட்டால் தான் அந்தந்த இனத்துக்கென இடமும் ஆட்சியும் கிடைக்கும். இல்லையேல் எந்த இனம் தந்திரத்தாலும் சூது சூழ்ச்சியிலும் தன்னலத்துக்காகப் பிறரை நசுக்கும் சுபாவத்திலும் கைதேர்ந்து இருக்கிறதோ அந்த இனத்திற்கு மற்ற இனங்கள் அடிமைப்பட்டு வாழவேண்டி நேரிடும்.

4. இந்தியா ஒரே நாடு என்று கூறி வருவதால் ஆரிய ஆதிக்கம் வளருகிறது. ஆரிய ஆட்சியின் காரணமாக மற்ற இன நலன்கள் தவிடு பொடியாயின.

5. முரண்பாடுள்ள இயல்புகளைக் கொண்ட இனங்களை ஒன்றாகச் சூழ்ச்சியால் பிணைத்துக் கட்டுவதால், கலவரமும் மனக் கிலேசமும் தொல்லையும் வளர்ந்தன. எனவே எதிர்காலத்தில் தொல்லைகள் வளர்ந்து இந்தியா இரத்தக்காடாகாதிருக்க வேண்டுமானால், இப்போதே சமரசமாக, இனவாரியாக இந்தியாவைப் பிரிக்கவேண்டும்.

6. இனவாரியாக நாடு பிரிக்கப்படுவது என்பது புதிதுமல்ல, கேட்டறியாததுமல்ல. ஏற்கனவே இந்தியாவில், பிரிட்டிஷ் இந்தியா, சுதேச இந்தியா, பிரன்சு இந்தியா, டச்சு இந்தியா எனப் பல இந்தியாக்கள் உள்ளன. இதுபோல் முஸ்லிம் இந்தியா, ஆரிய இந்தியா, திராவிட இந்தியா என மூன்று தனித்தனி வட்டாரங்கள் தேவை எனக் கேட்பது தவறல்ல.

7. சுதேச சமஸ்தானங்கள் மட்டும் 574 உள்ளன. அவைகளில் தனித்தனி ஆட்சி, தனித்தனி முறை; அதுபோல், மூன்று பெரும் பகுதிகள் தனித்தனி ஆட்சி முறையுடன் தத்தமது இன இயல்புகளை வளர்த்துக்கொள்ள வழி தேடிக்கொள்வது, தடுக்கமுடியாத உரிமை.

8. ஒட்டமான் சாம்ராஜ்யத்தின் பிணைப்பிலிருந்து விடுபட்ட துருக்கி, வல்லரசுகளில் தலை சிறந்ததாக ஆனதுபோல, இன வாரியாக இந்தியா பிரிக்கப்பட்டால், ஒவ்வொரு வட்டாரமும், தனிக் கீர்த்தியுடன் விளங்கும்.

9. தனித்தனி வட்டாரமானால், இராணுவ பலத்தை அவரவர் இயல்புகளுக்கு ஏற்றபடி வளர்க்க ஏது உண்டாகும்.

10. அசோகர், கனிஷ்கர், ஹர்ஷர், சமுத்திரகுப்தர், அக்பர் முதலிய மன்னாதி மன்னர்கள் காலத்திலும், இந்தியா ஒரே நாடாக இருந்ததில்லை. அப்போதும் திராவிடநாடு எனத் தனிநாடு இருந்தது.

11. தனித்தனி வட்டாரம் பிரிந்தால், அங்கங்குள்ள வசதிகளுக்கேற்றபடி பொருளாதார விருத்தி செய்து கொள்ளவும், ஒரு வட்டாரம் மற்ற இடங்களைச் சுரண்டும் கொடுமையை ஒழிக்கவும் முடியும்.

12. அந்தந்த இனத்துக்கெனத்

(13-ம் பக்கம் பார்க்க)

# ★ எப்படி நம்புவதோ? ★

நாம், கடவுள்களை நிந்திக்கும் கயவர்கள், மதத்தைக் குறை கூறுகிறோம் கண்டிருக்கிறோம், என்று உண்மையிலேயே உள்ளம் வருந்தும் அன்பர்கள் சில பேர் இருக்கிறார்கள்—வேறு பலர் உளர்—ஏதாவது சாக்குக் காட்டி நம்மைத் தூற்றுவதையே நோக்கமாகக் கொண்டவர்கள்—அவர்களைக் குறித்தல்ல நாம் குறிப்பிடுவது. உண்மையாகவே மனம் வருந்துகிறார்களே அவர்களுக்குக் கூறுகிறோம்—நமது கடவுள்களைப்பற்றியும் மதத்தின் பேராலும் கட்டப்பட்டுள்ள கற்பனைக் கதைகள், படித்துவிட்டுச் சற்றே சிந்திக்கும் எவருக்கும், அருவருப்பைத்தானே கிளறுவதாக இருக்கிறது—அறிவுக்குப் பொருந்தாத ஆபாசங்களை அல்லவா ஆண்டவனின் பெயருடன் இணைத்து இங்கே, மத நூற்களாக்கி விட்டனர். மக்களின் போது அறிவு வளர்ந்து, ஆராயுந் திறன் வளரும்போது, எப்படி அந்தக் கதைகளைப் பக்தியுடன் படிக்கவோ, நம்பவோ முடியும்!—இந்நிலையில், உலகமோ வேகமாக முன்னேறுகிறது—நாம் இந்த நாளிலேயும், அந்தப் பழய, நம்ப முடியாத, ஆபாசமான கதைகளை நம்பத்தான் வேண்டும்; அதுதான் மதவாதி என்பதற்கு இலட்சணம், என்று கூறினால், யாரால் சகித்துக் கொள்ள முடியும்? சில எடுத்துக் காட்டுகள்—இவை, நமது பெரியவர்கள் உச்சிமேல் வைத்துப்போற்றும் உயர்தரமான மத ஏடுகளிலே, கடவுள் திருவிளையாடல்களின் தொகுப்பாக உள்ள புராணங்களிலே காணப்படுபவை. இவைகளை எப்படி நம்புவது? நம்ப முடியுமா என்பதைக் கோபதாபமின்றி அன்பர்கள், கூறவேண்டும்.

1. சிங்காரச்சோலையில் சில முனிவர்கள் அனைத்தும் துறந்து ஆண்டவனை அடைய அல்லும்பகலும் தவம் செய்துகொண்டிருக்க, அங்கொரு பெண் மான் துள்ளி விளையாட, அதைக்கண்ட முனிவர்கள் அதன் மேல் ஆசைகொள்ள, அது உடனே கருவுயிர்த்து ஒரு பெண் குழந்தையை வள்ளிக்கிடங்கில் ஈன்று விட்டுச் சென்றுவிட்டது.

2. ஐந்நூறு யோசனை அகன்று நூறுயோசனை உயர்ந்த மரத்தைப் பிடுங்கி அவுணர்கள்மேல் வீசி எறிந்தார் வீரவாகு.

3. ஆயிரம் தலைகளும் இரண்டாயிரம் கைகால்களையுமுடைய சிங்கமுகாசூரன் எதிரிகளைக் கையில் எடுத்து விழுங்கினான்.

4. வாளுக்கிரையான சூரபன்மன் அண்டமுகட்டைத் தொடும்படியாக உயர்ந்து பூமி உருக்கொண்டெங்கும் நிறைந்து நின்றான். முருகன் 7 பாணங்களை எய்ய அவை 7 கடல்களாகச் சென்று அழிந்தன.

5. சிங்கமுகாசூரனுடைய வயிற்றை சுப்ரமணியரின் அம்பு துளைக்க அதன் வழியாக லக்ஷம் வீரர்கள் தோன்றினார்கள்.

6. சூரபன்மன் வேலின் படைக் கஞ்சிக் கடலின் மத்தியில் அண்ட கூடமளவும் உயர்ந்து லக்ஷம்யோசனை அகன்ற மாமரமாக நின்றான்.

7. தாரகன் லட்சம் வீரர்களைப் புழைக்கையால் பிடித்துக்கட்டிக்கடலில் எறிந்தான்.

8. வீரவாகு சாந்தமதன பர்வதத்தின்மேல் ஏறிநிற்க, அது அவரைத் தாங்காது பிளந்து பூமியில்ஆழ்ந்தது.

9. (அ) சூரபன்மனது தெற்கு வாயல், வாயல் காப்போனாகிய கயமுகன் ஆயிரம் தலைகளையும் இரண்டாயிரம்கைகால்களையுமுடையவன்.

(ஆ) கயமுகன் தன் மூவாயிரம் கைகளால், வீரவாகுவை எடுத்து விழுங்க எத்தனிக்க அவைகளைத் துண்டித்தார் வீரவாகு.

10. கயமுகன் ஆயிரம்குன்றுகளை எறிய அவைகள் வீரவாகுவின்மேல் பட்டவுடன் கல்லின்மேல் பட்ட பாண்டமாகுதல்.

11. கயமுகன் மலையைப்பெயர்த்து வீரவாகுவின்மேல் எறிய அதைவீரவாகு தோளில் தாங்க அவை மண்கட்டிபோல் உதிர்தல்.

12. தேவர்களும், அவுணர்களும் அமுதங் கடையும்போது மகாவிஷ்ணு மோகினியாகவும், ஈஸ்வரன் சுந்தர புருஷனாகவும், மோகினி அவர்பேரில் ஆசைகொள்ள அக்கணமே ஐயனார் தோன்றினார்.

13. அஷ்டகுல பர்வதங்களை ஓரிடத்தில் கூட்டுவது அவைகளைத் தலைகீழாய் நட்டு வைத்தல், கடல்களை ஒன்றாக்குதல் மேருமலையை சமுத்திரத்தில் ஆழ்த்துதல், பெருகிவரும் கங்கையை அடைத்தல், நாகங்களை நேராக உருட்டல், சூரிய சந்திர நக்ஷத்திரங்களை ஒன்றுடன் ஒன்று மோதவிட்டு மகிழ்தல். இவ்வளவும் பாலமுருகனது பால்ய லீலைகள்.

14. சூரபன்மன் தேவர்களையும், விருக்ஷம், மாதம், நாழிகை, நக்ஷத்திரம், நாள், சூரிய சந்திரன் முதலியவர்களையும் சிறை செய்தான்.

15. உமாதேவி காற் சிலம்பில் 9 முத்துகள் உதிர அவைகள் உமாவாக மாற உமா கண்டு கோபமடைந்து அவர்களைச்சபிக்க, சாபத்திற்கு அஞ்சிய அவர்களின் உடம்பில் வியர்வை உண்டாக வியர்வையினின்றும் லக்ஷம் வீரர்கள் தோன்றினார்கள்.

16. ஒன்பது நவஉருவங்களின் தொப்புள்வழியாக வீரவாகு முதலிய நவவீரர்கள் வாலிபப்பருவத்தினராய்த் தோன்றினார்கள்.

17. இந்திரன் புதல்வன், பானுகோபன், கூரையின் வழியாக சூரிய கிரணப் பட்டையால் சூரியனைப் பிடித்து வந்தான். பிறகு கட்டில் காலில் கட்டி வைத்தான்.

18. சிவனால் அளிக்கப்பட்ட அக்னிப்பொறிகள்யாவரும் சிறிதும் அணுகாவண்ணம் வெப்பத்துடன் உலகெங்கும் வீசின. வாயுக்கள் உலர்ந்தன, கடல்கள் வரண்டன.

19. வாயு அக்னிப் பொறிகளை தாங்கமுடியாமல் கங்கையில் போட, கங்கை சரவணப்பொய்கையில் போட்டுவிட்டாள்.

20. பார்வதிதேவி ஸ்நான அறைக்குப்போகும் பொழுது அழுக்கைத் திரட்டி உருசெய்து அவ்வுருவுக்கு உயிர் கொடுத்து வாயலில் காவல் வைக்க, சிவன் அங்குவர உட்செல்ல அனுமதிக்காததால் கோபமடைந்து அவ்வுருவைவாளால் வெட்டிவிட்டார். பிறகு விஷயமறிந்த பார்வதி புத்திர சோகத்தால் புலம்ப, சிவன் தேற்றி வெளியில் வந்து பார்க்க அவ்வுருவின் தலையைக் காணவில்லை. மூவுலகும் தேடியும் அகப்படவில்லை. உடனே அங்கொரு யானையின் தலையை வெட்டி வைத்து உயிர்கொடுக்க யானைமுக விநாயகராயிற்று.

✲

# கண்ணீரால் எழுதப்பட்டது

### திராவிட மன்னர்கள்.

தருமராஜன்போல் நாட்டைச் சூதாட்டத்தில் தோற்றதில்லை.

அரிச்சந்திரன் போல் நாட்டை முனிவருக்குத் தானம் செய்ததில்லை.

### திராவிடக் கவிஞர்கள்.

அதல சுதல பாதாளமென அண்டப் புளுகு எழுதவில்லை.

கண்ட கண்ட உருவெடுத்தார் கடவுள் என கதை தீட்டவில்லை.

காலடியில் புரண்டு தொழுதால் கடாட்சம் என்று கூறவில்லை.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்றனர்.

### திராவிடர்

உயிர்வாழ, மானத்தை இழந்ததில்லை

உறுதியின்றி ஊலுத்தராய் இருந்ததில்லை

சூது சூட்சியை ஆயுதமாகக்கொண்டதில்லை

சுதந்திர வாழ்வுக்காக உயிரையும் தந்தனர்.

### திராவிடம்

அன்னிய ஆட்சிக்கு அடிமைப் பட்டிருக்கவில்லை

பஞ்சமும் பிணியும் பதைப்புங்கண்டதில்லை

பாட்டாளி பதைக்கப் பார்த்துச் சகித்ததில்லை

உழைப்பால் உயர்ந்து உரிய இடம் பெற்றது உலகில்.

### திராவிடம் இன்று

திராவிட மன்னர்கள் மறைந்தனர்—மக்கள் பண்பை மறந்தனர்

வீரம் கருகிவிட்டது! வீணருக்கு ஆதிக்கம் ஏற்பட்டது

திராவிடக் கலைக்கும் மொழிகட்கும் மதிப்பு இல்லை

திராவிடத் தொழில்வளம் தூங்குகிறது. திராவிடன் தேம்புகிறான்.

திராவிடச் செல்வம், கோயிலில் கொடி மரத்தில், கொட்டு முழக்கில், வெட்டி வேலையில், வெளி நாட்டில், சென்று முடங்கி விட்டது.

திராவிடன், தேயிலை கரும்பு ரப்பர் தோட்டக் காடுகளில் கூலியாய் வதைகிறான்.

திராவிட நாட்டிலே, மூலைமுடுக்குகளிலெல்லாம், மார்வாடிக் கடைகள், குஜராத்திகளின் கிடங்குகள், மூலதனியின் முகாம்கள், சேட்களின் கம்பெனிகள்.

பெரிய வியாபாரங்களெல்லாம் வட நாட்டாரிடம்.

தொழிற்சாலைகளிலே, துரைமார்கள் இல்லை—பனியாக்கள்.

டால்மியாவுக்கு திருச்சிக்குப் பக்கத்திலே நகரமே இருக்கிறது.

ஆஷர் சேட்களுக்கு திருப்பூர் கோவை வட்டாரத்தில் ஆலை அரசர்கள் எல்லாம்கட்டியம் கூறவேண்டிய நிலைமை.

சென்னையிலே, சௌக்கார் பேட்டை-இருக்கிறது-பாரத்பாங்க் இருக்கிறது.

தினம் ஒலிக்கும் மணி, ஒரு வட நாட்டு கோயங்கா உடையது. சென்னையில் பெரிய, கட்டிடங்கள் இன்று வட நாட்டாருக்குச் சொந்தம்!

இங்கிலையில் உள்ள திராவிடத்திலே, ஆடை முதல் ஆணி வரை, வட நாட்டிலிருந்து வருகிறது. வருகிறது என்னும்போது, ஏராளமான பணம் இங்கிருந்து வட நாட்டுக்குப் போகிறது என்று பொருள்.

வளம் இழந்து, இருக்கும் கொஞ்ச நஞ்சம் வளத்தையும் வட நாட்டுக்குக் கொட்டி அழுதுவிட்டு, வறுமைப் பிணியுடன் வாடும், திராவிடம், தலை தூக்க, அதன் மக்களுக்கு முழு வாழ்வுகிடைக்க, வெளிநாடுகளுக்குக்கூலிகளாகச் சென்றுள்ளவர்கள், திரும்பி வர, வாழ்க்கைத் தரம் உயர, திராவிட நாடு திராவிடருக்கு என்ற நமது திட்டம் தவிர வேறு திட்டம் இல்லை!

பொருளாதாரத்தையே அடிப் படையில்கொண்ட இப்பிரச்னையை, வெறும் கட்சிக் கண்களுடன் நோக்காமல், நாட்டுப் பற்று நிரம்பிய கண் கொண்டு காணும்படி, திராவிடர் கழகத்தை—சாராதாரணை வரையும் கேட்டுக் கொள்கிறோம்.

தலையிலே, 'பிரி பிரியாக' வர்ணத் துணியைச் சுற்றிக்கொண்டு, போர் போராக உள்ள சாமான்களின் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டு வட்டிக் கணக்கைப் பார்த்துக் கொண்டே, வயிற்றைத் தடவிக் கொண்டுள்ள மார்வாரியையும் பாருங்கள், பாரம் நிறைந்த வண்டியை, மாட்டுக்குப் பதிலாக இழுத்துச் செல்லும் தமிழனையும் பாருங்கள்! மெருகு கலையாத மோட்டாரில் பவனி வரும் சேட்டுகளையும் பாருங்கள், கூலி வேலைக்கு வெளிநாடு செல்ல, கிழிந்த ஆடையும் வறண்ட தலையும் ஒளியிழந்த கண்களும் கொண்ட தமிழன், கப்பல் டிக்கட்டுக்குக் காத்துக் கொண்டிருக்கும் காட்சியையும் காணுங்கள். இங்கே பச்சைப் பசேலென்று உள்ள நஞ்சை புஞ்சையையும் பாருங்கள், அதே போது நடக்கவும் சக்தியற்று, பசியால் மெலிந்துள்ள தமிழர்களையும் பாருங்கள்-எங்களை மறந்து-இந்தக் காட்சிகளைக் காணுங்கள்—நாங்கள் கூறுகிறோம் ஒருதிட்டம் என்பதைக் கூட மறந்து—நீங்களாக யோசித்து ஒரு திட்டம் கூறுங்கள்—பண்டைப் பெருமையுடன் இருந்த ஒரு நாடு, பல்வேறு வளங்கள் நிரம்பிய நாடு, இன்று, வடநாட்டுடன் இணைக்கப் பட்டு, இப்படி வதைபடுவது நியாயமா, இந்த இணைப்பிலிருந்து விடுபட்டு, தனித்து நின்று, தனி அரசு நடத்தி, நாட்டுவளத்தைப் பெருக்கி, அந்த வளம் நாட்டு மக்களுக்கே பயன்படும்படிச் செய்வது, குற்றமா? அதற்கு, திராவிட நாடு திராவிடர்க்கே என்பதன்றி வேறென்ன திட்டம் இருக்கமுடியும்? இருந்தால் கூறுங்கள்.!

கப்பல் தட்டிலே நின்றுகொண்டு, வளமிகுந்த என் தாய்நாட்டிலே என் வாழ்வுக்குப் போதுமான வழி கிடைக்காததால், இதோ நான், மலேயா போகிறேன்; கண் காணாச் சீமை; காட்டிலே வேலை செய்யப் போகிறேன்; தாயைப் பிரிந்து போகிறேன்; தாய் நாட்டிலிருந்து வறுமை என்னைத் துரத்துகிறது; வெளிநாடு செல்கிறேன் கூலியாக; என்று ஏக்கத்துடன் கூறி, தமிழன் சிந்திய கண்ணீர் கொண்டு எழுதப்பட்ட இலட்சியம்,

திராவிட நாடு திராவிடருக்கே என்பது.

# புதிய வரலாறு

11—9—1938
**தமிழ்நாடு தமிழருக்கே**
என்று
நாம்
பரணி பாடினோம்

27—12—1938
**வேலூர் தமிழர் மாநாட்டில்**
தமிழ்நாடு
எதிர்காலத் திட்டம்
பேசப்பட்டது.

29—12—38
சென்னை, ஜஸ்டிஸ் மாகாண
மாநாட்டில்
**தமிழ்நாடு தனிநாடு
ஆகவேண்டும்**
என்பது
வலியுறுத்தப் பட்டது.

10—12—39
**தமிழ் நாடு தமிழருக்கே**
என்ற
திட்டத்தை
நாட்டுமக்களுக்கு விளக்க
விழா
கொண்டாடப் பட்டது.

2—7—40
காஞ்சிபுரத்தில் திராவிடநாடு
**பிரிவினை மாநாடு**
நடத்தப்பட்டு, பிரிவினைக்குக்
கமிட்டி
நியமிக்கப்பட்டது.

24, 25—8—1940
திருவாரூர், மாகாண மாநாட்டில்
**திராவிடநாடு தனிநாடாக வேண்டும்**
என்ற
திட்டம் தீர்மானமாயிற்று.

20—8—44
மாகாண
சேலம் மாநாட்டில்,
**திராவிடநாடு தனிநாடாக**
வேண்டும்
என்பது
**கட்சியின் மூலாதாரத்**
திட்டமாக்கப் பட்டதுடன்
கட்சியின் பெயரே
**திராவிடர் கழகம்**
என்று மாற்றப்பட்டது.

29—9—45
திருச்சியில், மாகாண மாநாட்டில்
**திராவிடநாடு தனிநாடாக**
வேண்டும் என்பது
மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

1—7—1947
**திராவிடநாடு பிரிவினைநாள்**
கொண்டாட்டம்.

---

## சொன்னோம்

—*—

*பாகிஸ்தான் பெறுவது இன்றேல் கபர்ஸ்தான் புகுவது என்று எண்ணுமளவுக்கு இஸ்லாமியர் துணிந்து விட்டனர். அவர்கள் தோட்டா இல்லாத துப்பாக்கிகளல்ல.*

"விடுதலை"
1940 டிசம்பர் 16.

## சொன்னார்

—*—

*"பாகிஸ்தான் திட்டம் ஆபாசமானது, விஷமத்தனமானது, காங்கிரஸ் யோசித்துப் பார்க்குமளவு யோக்யதை உள்ள விஷயம் என்றுகூட அதனைக் காங்கிரஸ் கருதவில்லை."*

1940 அக்டோபர்,
ஜவஹர்.

---

## நடந்தது?

பாகிஸ்தான் கிடைத்துவிட்டது.

திராவிட நாடு

காஞ்சி] 29—6—47 [ஞாயிறு

# இலட்சியம் வளர்ந்த வரலாறு

திராவிட நாடு திராவிடருக்கே என்ற இலட்சியம், இப்போது நமது மூல முழக்கமாகிவிட்டது. மற்றப் பல பிரச்னைகள் யாவும், இந்த இலட்சியத்துக்குத் துணை தேடும் அளவுக்கே கவனிக்கப் படுகின்றன. ஒரே நோக்கமாக, இந்த இலட்சியத்தைக் கொண்டிருக்கிறோம். திராவிடர் கழகத்தைச் சார்ந்தவர்களுக்கு, மத, சமுதாய, பொருளாதாரப் பிரச்னைகளிலே பலவகையான கருத்துகளும் திட்டங்களும் உண்டு என்ற போதிலும், இவையாவும், இசைக்கு உள்ள 'சுருதி' போல, திராவிடநாடு திராவிடருக்கே, என்ற இலட்சியத்துக்குத் தக்க விதமாகவே, அமைத்துக் கொள்ளப்படுகிறது.

இந்த இலட்சியத்தை நாம் கைவிடப் போவதில்லை என்ற நமது உறுதியைத் தெரிவிக்கவும், இந்த இலட்சியம் நிறைவேறு முன்னம், இடையிலே வீசப்படும் சில்லறைகளைக் கண்டு திருப்திப் படமுடியாது என்பதைத் திட்டமாகத் தெரிவிக்கவும், திராவிட நாடு பிரிவினை நாள் கொண்டாட்டம் ஏற்பாடாகிறது. இந்தச் சமயத்தில், திராவிட நாடு திராவிடருக்கே என்ற நமது இலட்சியம் வளர்ந்த விதத்தைக் கவனப்படுத்திக் கொள்ள விரும்புகிறோம்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பே, இங்கு, திராவிடர் என்ற உரிமை முழக்கம் கிளம்பிற்று. ஆனால், அந்த முழக்கம், மாளிகை வாசிகளின் தொடர்பினால் கெட்டு விட்டது. இந்த நாடு திராவிட நாடு-இங்குள்ள நாம் திராவிடர்-என்ற முழக்கத்தை மக்கள் மன்றத்திலே, தமது கடைசி மூச்சு இருக்கும் வரை செய்து வந்தவர் டாக்டர் C. நடேச முதலியார். அவர் துவக்கிய அந்த அரிய இயக்கத்தினால் உண்டான வேகத்தை, உண்மையான விடுதலைக்குப் பயன் படுத்திக் கொள்ளாமல், அரண்மனைகளிலே வீற்றுக் கொண்டு அரசியலை நடத்தி வந்த சீமான்கள், பட்டம் பதவிகளுக்கு, இந்த வேகத்தைப் பயன்படுத்திக் கொண்டதுடன், தங்களுடைய முழுத் திறமையும், காங்கிரசைக் குறை கூறவும், அதே நேரத்தில் பிரிட்டிஷாருக்குத் துதி பாடவுமே உபயோகப்பட வேண்டுமென்று நோக்கம் கொண்டவர்களாக இருந்தனர். எனவே, திராவிடர் என்ற உரிமைச் சொல், திராவிட அரசு அமைக்கும் பரணியாகாமல், சர்க்கார் காரியாலயக் கதவைத் தட்டும் சுயநலச் சத்தமாகிவிட்டது. டாக்டர் நடேச முதலியார், உள்ளம் உடைந்தே மாண்டார். இருந்தவரையில் அவர் திராவிடன் என்று பேசத் தவறியதில்லை.

அந்த நாட்களிலே, ஆங்கிலத்திலே, S. I. L. F. என்றும் ஜஸ்டிஸ் என்றும், பெயர் மாளிகைகளில் வழங்கிவந்ததே யொழிய, மக்களின் முன்பு, திராவிடன் என்ற பெயரே, வழங்கப்பட்டது. தமிழ்ப் பத்திரிகையின் பெயரே, 'திராவிடன்'. திராவிடக்கலை, திராவிட மதம், திராவிட வைத்தியம், திராவிட இசைவாணர்கள்—என்றெல்லாம், அந்த நாளில், பலர், பல்வேறு துறைகளிலே, திராவிட மறுமலர்ச்சிக்காக பணிபுரிய முனைந்தனர். ஆனால் அந்த அடிப்படை வேலையில் ஆர்வம் காட்டத் தலைவர்கள் தவறிவிட்டனர். அவர்கள் தங்கள் ஆற்றலை எல்லாம் அரசியல் அதிகாரம் எனும் மாய மானைப் பிடிக்கவே செலவிட்டனர். அதனால், அவர்கள், ஒவ்வொரு நகரிலும், பிரமுகர்களைச் சந்தித்தபோது, தேர்தலைப் பற்றிப் பேசி வந்தனரே தவிர, உத்யோகத் துறையிலே, ஐயர்களுக்கு ஆதிக்கம் இருக்கிறது அதை ஒழிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தனரே யொழிய சமுதாயத்திலே படிந்து கிடந்த ஆரியத்தை அகற்ற, திராவிட உணர்ச்சியை ஊட்ட, பணி புரியவில்லை.

சமுதாயத் துறையிலே பார்ப்பனர் ஆதிக்கம் செலுத்துவது ஆபத்தல்ல; அரசியலில் ஆதிக்கம் பெற்றுள்ள பார்ப்பனர்களாலேயே நமக்கு ஆபத்து—என்று வெளிப் படையாகவே அந்த நாள் தலைவர்கள் பேசி வந்தனர்.

தலைவர்களின் பேச்சு அவ்விதமிருந்தது; டாக்டர் நடேச முதலியார் போன்ற ஒருவரிருவர் தவிர; அதே போது, மக்களிடம் பழகி, பிரசாரம் புரிந்து வந்த, J. N. ராமநாதன், கண்ணப்பர், T. V. சுப்ரமணியம், போன்றவர்கள், திராவிடன் என்ற உணர்ச்சியை ஊட்டியும் அரசியலிலே மட்டுமல்லாமல், சமுதாயத் துறையிலே பார்ப்பனர்கள் பெற்றிருந்த ஆதிக்கத்தை விளக்கிக் கண்டித்தும் வந்தனர்.

மக்களை, அவர்கள் திராவிடர்களாக வாழும்படி வலியுறுத்தி வந்தனர்.

தலைவர்களோ, மக்களை, பார்ப்பனர்களுக்கு எதிராக 'ஓட்' கொடுக்கும் அளவுக்குத்தான், உபயோகித்தனர்.

எனவே மக்களுக்கு, அந்தத் தலைவர்களின் போக்கு முதலில் புரியவில்லை, புரிந்த பிறகு பிடிக்கவில்லை, பிடிக்காததால், விலகினர்.

திராவிட இன உணர்ச்சிக்காக எடுத்துக்கொண்ட முதல் முயற்சி முறியடிக்கப்பட்டது, மக்களுக்கு ஆர்வம் ஏற்படாமல் போனதால் அல்ல, நமது தலைவர்கள், அரசியலை மட்டுமே கவனித்து, சமுதாயத்தில் தலையிடுவதைத் தவறு என்று எண்ணியதால்.

ஒரு இருபதாண்டுகள், மாயமான் வேட்டையில்—மந்திரிப் பதவி அமைப்பதில், அதாவது, சுயநல வேட்டைக்கு, அதன் விளைவாக, சதியாலோசனைகளுக்குச் செலவிடப்பட்டது. அந்தக் காலத்திலே, மாளிகைகள் சதியாலோசனை மண்டபங்களாயின. ஆள் தூக்கிகள், அரசியல் சூத்திரதாரிகளாயினர்! பதவி தேடுவோர், அரங்க மேறினர்! பாக்கிக்கும் கொண்டாட்டம். மக்கள், இந்தக் காரியம், தங்களுக்கு அல்ல, என்பதைத் திட்டமாகத் தெரிந்து கொண்டு, கட்சியைக் கண்டிக்கவே தொடங்கினர். மாளிகைகளிலேசதிச் செயல்கள், கட்டுக்கடங்கா நிலை பெற்று, ஒரு தலைவர் இன்னொரு தலைவரை வீழ்த்துவதையே தொழிலாகக் கொண்டு, ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு, குப்பலாகச் சாய்ந்தனர். அந்த அதிர்ச்சியிலே, ஆரம்பத்திலே ஆர்வத்துடன் கிளம்பிய திராவிட இன உணர்ச்சி, மங்கிற்று—மடியவில்லை.

அந்த உணர்ச்சி, என்றுமே மடிந்ததில்லை—அடிக்கடி மங்கி இருக்கிறது—ஏனெனில், அந்த உணர்ச்சி, உள்ளத்தின் பேச்சு—அரசியல் வெட்டுக்கிளிகளின் கூச்சல் அல்ல.

இங்கு, நெடுங்காலமாகவே, ஆரி

யத்தின் அணைப்பிலிருந்து விடுபட, திராவிடம் பல முறை முயன்றிருக்கிறது. சில நேரத்தில் செயலற்று இருந்தது என்ற போதிலும், அடியோடு சரண்புகுந்ததில்லை. அடிக்கடி தனித் தமிழ், வேளாள நாகரிகம், உண்மைச் சைவம், பண்டை நாகரிகம், என்ற பல்வேறு தலைப்புகளிலே கிளம்பிய இயக்கங்கள் யாவும், மூல முயற்சியின், சிறு சிறு பதிப்புகளேயாகும். இவை ஒவ்வொன்றும், தேவை, பலனுமுண்டு இவைகளால் என்ற போதிலும், இவை, மக்களில் ஒரு சிலரால் மட்டுமே உணரக்கூடியதாக இருந்த காரணத்தால், மூல முயற்சியை, இந்த இயக்கங்கள் பலப்படுத்த முடியவில்லை. ஒவ்வொன்றும், தனித்தனி இயக்கங்களாக மாறிவிட்டன. முரண்பாடுகளாகவும் தெரியலாயின. விரோத உணர்ச்சியும் கூட வளர்ந்தன. தமிழகத்திலே, பல முகாம்கள் தோன்றலாயின! மூல முயற்சியை மறந்துவிட்டனர்.

கண்ணைக் கட்டிவிடப்பட்ட வீரன், சாலையிலே நடந்து செல்கையில், மரத்துக்கு மரம் மோதிக்கொண்டு சங்கடப்படுவதைப்போல, நாடு, இருந்தது. மீண்டும் ஒருமுறை திராவிட இன உணர்ச்சி தோன்றுமா என்பதே சந்தேகமாகிவிட்டது. அந்த உணர்ச்சி அடியோடு மடிந்துவிட்டது என்று மாற்றார்கள் மகிழவும் செய்தனர். ஆனால் இலட்சியம், மடியவில்லை — சமயத்துக்காகக் காத்துக்கொண்டிருந்தது.

பலப் பல சமயங்கள் வந்தன— ஆனால் சரியான சமயங்களாகவில்லை.

இந்தி எதிர்ப்புப் போராட்டம். தங்க சமயமாயிற்று. நாடு எங்கும், காங்கிரஸ்மீது கோபம்மட்டுமல்ல— அதன் அளவு குறைவுதான்–தமிழ்ப்பற்று, பரவிய காலம். எங்கும் சங்க நூற்களைப் படிக்க ஆரம்பித்தகாலம். தமிழனுக்குத் தனியான ஓர் மொழி உண்டு, தனியான பண்பு உண்டு, என்ற பெருமையைப் பேசலாயினர்! ஐம்பெரும் காப்பியத்தைப் பற்றிய பேச்சு பொதுமேடைக்கு வந்துவிட்டது! ஆர்வம், தமிழ்மீது அதிகமானதும், இடையே, புராணீகர்களும் புகுந்துகொண்டனர். ஆனால் அவர்களின் ஆதிக்கம் வளரமுடியாதபடி, தமிழ் ஆர்வம் கொண்டவர்கள் தமிழ்மொழி தாழ்வுற்ற காரணம் என்ன, தமிழ்ப் பண்பு மறைந்த காரணம், தமிழ்ச் சிறப்பு தேய்ந்த காரணம் ஆகியவற்றை ஆராயத் தொடங்கினர், அந்த ஆராய்ச்சி அவர்களை, விட்ட இடத்தில் கொண்டுவந்து சேர்த்தது—அதாவது டாக்டர் நடேச முதலியாரின் கல்லறைக்கு அருகே கொண்டுவந்து நிறுத்திற்று. பழைய நினைவுகள், பழைய பாணிகள் மீண்டும் உலவலாயின!

தமிழ்மொழியைக் காப்பாற்ற ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சிறை சென்ற காட்சி, தமிழரின் உள்ளத்திலே, ஓர் புது உணர்ச்சியை உண்டாக்கிவிட்டது. தாலமுத்து நடராஜன் கல்லறைமீது தமிழர் கண்ணீர் சிந்தினர். இருவாலிபர்களுக்குச் சாவு, பல வாலிபர்களுக்குச் சிறை, எல்லாம் தமிழ் மொழியின் பாதுகாப்பின் பொருட்டு-என்பதை அந்தக்கல்லறையின் பக்கம் நின்று சிந்தித்தபோதுதான், இந்நிலை மாற வேண்டும் என்ற உறுதி தமிழருக்குப் பிறந்தது. அப்போதுதான் "தமிழ்மொழிக்குப் பிறமொழியால் ஆபத்து என்று அலறுகிறாயே தோழனே! ஏன்வந்தது அந்த ஆபத்து? யாரால் வந்தது? என்பதைஎண்ணிப்பார். மொழிக்கு மட்டுந்தானா, கலைக்கு, மதத்துக்கு, பண்புக்கு, இனத்துக்கு, நாட்டுக்கு, உன் வாழ்வுக்கேஆபத்து வந்திருக்கிறதே அதைத்தெரிந்துகொண்டாயா? எவரால் வந்தது இந்த ஆபத்து என்பதை அறிவாயா? ஏன் வந்தது என்பதை யோசிப்பாயா? நான் கூறுகிறேன் கேள். தமிழ்நாடு தமிழனிடம் இல்லை! ஆகவேதான் தமிழனுடைய பொருள் தமிழனிடம் இல்லை! பிறநாட்டான் எண்ணுகிற எண்ணமெல்லாம் இங்கு இப்போது சட்டமாகிவிடுகிறது. பிறநாட்டானின் பொருளுக்கு இது மார்க்கட்டாகிறது. இந்நிலை மாறவேண்டும்–இதற்குமொழிப்போராட்டம் மட்டும்போதாது — இது முடிவல்ல; தொடக்கம்—இந்தியை விரட்டினால் மட்டும் போதாது, தமிழ்நாட்டின்மீது ஆதிக்கம் செலுத்தும் தீய சக்திகள் யாவும் தொலையவேண்டும் —அதுவே நமது முழக்கமாகவேண்டும்—இனி அதுவே நமது போர்—நமது இலட்சியம் — தமிழ்நாடு தமிழருக்கே, என்று பெரியார் இராமசாமி முழக்கமிட்டார். ஆம்! ஆம்!! அறிந்தோம்! தெளிந்தோம்! என்று அன்று கடற்கரையில் கூடிய இலட்சத்தை எட்டிப்பார்த்த பெருந்தொகையினரான மக்கள் முழக்கமிட்டனர் — உறுதி கொண்டனர், மக்களின் மனக் குமுறலைக் காட்டுவதுபோல கடலலை ஒலித்தது; மேலே நிலவு! தமிழரின் விழிப்புற்ற நிலையை விளக்குவதுபோல! வானத்திலே இங்குமங்கும்மேகங்கள் தமிழ்ச்சமுதாயத்திலே உள்ள கறைகள்போல! தமிழன் மீண்டும் தன் இலட்சியத்தைப் பெற்றுவிட்டான். தமிழ்நாடு தமிழருக்கேஎன்றுமுழக்கமிட்டான். மங்கியிருந்த இலட்சியம், மீண்டும் உலவலாயிற்று! இம்முறை நேரடியாக, மக்கள் மன்றத்துக்கு இலட்சியம் போய்ச்சேர்ந்தது! ஆகவே அந்த இலட்சியத்துக்கு, புதியதோர் சக்தி ஏற்பட்டுவிட்டது. மக்களுக்கு தாங்கள் ஒரு இலட்சியத்துக்காகப் பணியாற்றப்போகிறோம் என்ற ஆர்வம்ஏற்பட்டது. மாளிகைக்கு அல்ல, பதவிக்கு அல்ல; நம் நாட்டின் தனி உரிமைக்குப் போரிடப்போகிறோம் என்று எண்ணலாயினர்! அந்த எண்ணம், புரட்சிக்கவிஞரின் பொன்மொழிகளினால், மேலும் உரம் பெற்றது.

ஆடுவமே பள்ளுப்பாடுவமே
தமிழ் ஆட்சியின் மாட்சியில்
கூடுவமே!

என்றார் கவிஞர்! ஆயிரமாயிரம் இளைஞர்களின் விழிகளிலே களிப்பு கூத்தாடலாயிற்று. தேர்தல், சட்டசபை, மந்திரிசபை, முதலியன, அவர்களின் பார்வைக்கு மிக மிகச் சாமான்யப் பொருள்களாயின, அந்தப்பொருள்களுக்காக ஆவல்கொண்டிருப்பவர்கள், இளைஞர்களின் கண்களிலே, சேலத்தில் கேலிச் சித்திரங்களாகத் தெரியலாயினர். தடைகளை, சங்கடங்களை, மீறி, இளைஞர்கள், அந்த இலட்சியத்தை நோக்கி நடக்கலாயினர், புதிய பாதை கிடைத்துவிட்டது என்ற பூரிப்புடன்.

தமிழன், தன் மொழி கலை, நிலைகளைக்காப்பாற்ற, நாட்டைமீட்டாக வேண்டும் என்பதைக் கண்டறிந்து, கூறிய போர்முழக்கம் தமிழ் நாடு தமிழருக்கே! என்பது.

எலிவளை எலிகளுக்கே! என்றனர் ஏளனம் பேசி இதையும் ஒழித்துவிடமுடியும் என்று எண்ணிய அறிவாளிகள்! மக்களோ, தமிழ்நாடு தமிழருக்கே, என்பதை உச்சரிக்கலாயினர்; உண்மைதானே, நியாயம் தானே, அவசியம் தானே என்று கூறிக்கொண்டனர்; கூறிக்கொண்டே மேலும் யோசிக்கலாயினர்—இன்று எப்படி இருக்கிறது தமிழ்நாடு என்று, சர்வம் ஆரியமய

மாக இருக்கக் கண்டனர்—எப்போது இருந்தது இந்நிலை என்று ஆராயத் தொடங்கினர்—தமிழன் ஆரியத்துக்கு இடங்கொடுத்தான் திராவிடம் இந்நிலை என்பதறிந்தனர்—அதற்கு முன்பு எந்நிலை என்று ஆராய்ந்தனர், முப்புறம் கடலும் வடபுறம் விந்தியமும் அரணளிக்க, அழகுத் திராவிடம், ஆற்றலுடன் விளங்கியிருந்ததைக் கண்டறிந்தனர். திராவிடத்தின் ஒருபகுதி ஆந்திரமாகி, பிறிதோர்பகுதி கேரளமாகி விட்டதைக் கண்டனர்—பிரிந்தாலும், இவைகளுக்கிடையே மொழிவழியாக ஒருமைப்பாடு இருந்ததைக் கண்டனர்—பண்டைத் திராவிடத்தை நினைவிற் கொண்டனர்—ஆரியத்துக்கு எதிர்ச்சொல்லாக—ஆரியம் என்ற கலாச்சாரத்துக்கு முற்றிலும் மாறான கலாச்சாரத்தை உணர்த்தும் குறியாக, திராவிடம் என்றசொல் இருக்கக் கண்டனர். சரிதமும் பூகோளமும், மக்கள் உளப்பண்பு நூலும் இந்த உண்மைக்கு ஆக்கம் அளித்திடக் கண்டனர்! ஓஹோஹோ! கண்டோம் உண்மையை என்றனர். திராவிடநாடு திராவிடருக்கே என்றனர். இலட்சியம் முழுஉருவம் பெற்றது! இன்று அந்த இலட்சியத்தை ஆதரிக்க திராவிடநாடு திராவிடருக்கே என்று கூறமட்டும் கூச்சப்பட்டுக்கொண்டு, மாகாண சுதந்திரம், மாகாண சுயாட்சி என்று சிலபலர் கூறுவர். சிலர், முழுஉரிமை நமக்கு, ஆனால் அகில இந்தியத்தொடர்பு வேண்டுமன்றோ என்பர். அவர்களின், வார்த்தையிலே உள்ள வளைவு நெளிவுகள் அல்ல முக்கியமாகநாம் கவனிக்க வேண்டியவை—அவர்கள் இலட்சியத்தை நோக்கி நடந்து வருகிறார்கள் என்பதே முக்கியம்.

தமிழ் நாட்டுக்காங்கிரசின் தலைவர், நாம் திராவிடப் பிரிவினை நாள் கொண்டாடும் சமயமாகப் பார்த்து,

“திராவிடநாடு தனிநாடு ஆக வேண்டும் என்ற திட்டம், நாட்டை மேலும் பிளவுபடுத்துவதாகவே முடியும்.” என்று கூறினார்.

அதாவது, நண்பர் காமராஜர் நமது திட்டத்தின் விளைவு என்ன என்பதைக் கூறுகிறார். ஏன் அந்தத் திட்டம் தேவைப்படுகிறது என்பது பற்றிச் சிந்திக்க மறுக்கிறார் — ஒருவேளை சிந்தித்து, உண்மையைக் கண்டபிறகு மறைக்கிறாரோ என்னவோ!

தமது விஷயத்திலே வடநாட்டுத் தலைவர்கள் குறுக்கிட்டபோது, காமராஜருக்கு மேலிடத்தின் மீது எவ்வளவு கோபம் வந்தது—நாம், அதே மேலிடம், உள்நாட்டு விவகாரத்தில், கலையில், நாகரிகத்தில், முக்கியமாகப் பொருளாதாரத்துறையிலே நுழைந்து, ஆதிக்கம் பெறுவதைக்கண்டு. கோபிப்பது, குற்றமாகுமா என்பதை அவர் யோசிக்க வேண்டும். அவருக்குள்ள பல தொல்லைகளுக்கிடையே அவகாசம் கிடைப்பது அரிது, என்றாலும், கொஞ்சம் அவகாசம் ஏற்படுத்திக் கொண்டு, நமது தலைவரிடம் பேசினால், திராவிடநாடு ஏன் தனிநாடாக வேண்டும் என்று கூறுகிறோம் என்ற காரணங்களைத் தெரிந்து கொள்ளலாம்—பிறகு அவர் தமது கருத்தை வெளியிட்டால் பொருத்தமிருக்கும். ஒரு பிரச்னையை, அதன் விளைவை முன்கூட்டித் தாமாகக் கற்பித்துக் கொண்டு, கவனிப்பது, சரியான முறையல்ல.

இந்தப்பிரச்னையைக் கவனிக்கும்படி, காரணங்களை ஆராயும்படி, காமராஜர்களை அழைக்கும் நாள் தான் ஜூலை 1-ந் தேதி.

திராவிடஸ்தானால், நாடு துண்டாகும் என்று சொன்னவர், அதே போது, நமது இலட்சியத்தின் அருகே வந்து போகிறார். தெரிந்தோ தெரியாமலோ! அவர் கூறியிருக்கிறார், ஆந்திரம், கேரளம், தமிழகம், ஆகியவைகள் தனிச்சுதந்திர அமைப்புகளாகி, இந்திய சமஷ்டியோடு கூடி வாழவேண்டும், என்று. INDEPENDENT UNITS தனிஉரிமையுள்ள அங்கங்கள்! என்கிறார். ஏன், அந்த ஆசைபிறந்தது? தனிஉரிமை கோரக்காரணம் என்ன? இப்போதுள்ள நிலைக்கும், தனிஉரிமை பெற்றால் ஏற்படும் நிலைமைக்கும் இடையே உள்ள வித்யாசம் என்ன? இதனை அவர் விளக்கவில்லை! அது மட்டுமல்ல, அவருடைய ‘ஆசை’க்கு நேர்மாறாக இப்போது, அ. நி. சபையில், இந்த ‘அங்கங்கள்’ பங்கப்படுத்தப்படுகின்றன என்பதையும் அவர் மறைக்கிறார்—தடுக்க முடியாத காரணத்தால்! தனி அரசுரிமை கோருகிறார்—நாம் அதிலே மாற்று மருவற்ற நிலை கேட்கிறோம். அவர், தனி அரசுரிமை பெற்றாலும், இந்திய சமஷ்டியிலே சேரவேண்டும் என்கிறார். இந்திய சமஷ்டி மட்டுமல்ல, நேரு கூறும் ஆசிய சமஷ்டியானாலும் சரி, வெண்டல் வில்க்கி கூறிய உலகச் சமஷ்டியானாலும் சரி, சேருவோம், தவறில்லை, தடையில்லை; ஆனால், தனி அரசுரிமை வேண்டுமே, எங்கே அதற்குத் திட்டம்—திட்டம் தீட்டி விடுகிறார்களே அ. நி. சபையில் அது காமராஜரின் ஆவலைப் பூர்த்தி செய்யக் கூடியது அல்லவே, அதற்கு என்ன சொல்கிறார் அன்பர்.

திராவிடஸ்தான் கூடாது என்று பேசுமுன்பு, ஏன் கேட்கிறார்கள் என்பதை, பொறுப்பான இடங்களில் உள்ள காங்கிரஸ் தலைவர்கள், கேட்டறியவேண்டும். அதற்கு அழைப்புச்சீட்டுதான், விழாநாள். நாம் இந்த இலட்சியத்தை எதிர்ப்பதாகக்கூறும் நண்பர்களின் வாய்மொழிகளிலே கூட நமது இலட்சியத்தின் சாயல் இருக்கக்கண்டு மகிழ்கிறோம். இந்நிலைக்குக்காரணம் என்ன? இலட்சியம் வளர்ந்துவிட்டது — எதிர்பாராத இடங்களிலெல்லாம் அதன் மணம் இருக்கக்காண்கிறோம். இனிச் சிலகாலம் நமது இலட்சியத்தை விளக்கி— குறிப்பாக — அதற்கான பொருளாதாரக் காரணங்களைவிளக்கிக்கூறினோமானால், திராவிடநாடு திராவிடருக்கே, என்பது கட்சி முழக்கம் என்ற நிலைமாறி, நாட்டு முழக்கமாகும். பல தடைகளைமீறி வளர்ந்துள்ள இலட்சியம் இந்தமுழு உருவுடன் விளங்கத்தான்போகிறது. ஏனெனில், இந்த இலட்சியம் விழிப்புற்ற மக்களின் உரிமை முரசொலி —கட்சிப்பேச்சல்ல.

இராமகிருஷ்ணர் படங்கள், கல்கத்தாவில அச்சாகி நமக்குக் கிடைத்து, டால்மியா சிமிட்டி பூசப்பட்ட சுவற்றிலே, டாட்டா கம்பெனி அனுப்பும் ஆணியை அடித்து மாட்டும் போதெல்லாம், இந்த இலட்சியம், மெள்ள காதருகே நின்று கேட்கும், இதுதான் உன் நிலையா? உன் நாட்டிலே இரும்பு இல்லையா? என்று கேட்டுவிட்டுச் சிரிக்கும்! ஷோலாப்பூர் பம்பாயிலிருந்து வேட்டியும் சேலையும், லாகூருக்கும் பெஷாவருக்கும் போகமுடியாததால், அதிகமாக இங்கே வருகிறபோது, இலட்சியம் கவனத்துக்கு வரும்! வங்காள ரசாயன சாலையிலிருந்து வரும் மருந்துவகை இலட்சியத்தைக் கவனப்படுத்தும்! டில்லி உலகுடன் நடத்தும் வியாபாரமும், கொள்ளும் தொடர்பும், விந்தியத்துக்கு மேலே உள்ளவர்களோடு முடிந்து விடுகிறபோது, இலட்சியம் கவனத்துக்கு

(12-ம் பக்கம் பார்க்க)

## அன்றும் இன்றும்

கரியல்
பேடகம்
பரியட்டக்காசு
வேதங்கம்
புங்கர் காழகம்
சில்லிகை
தூரியம்
பங்கம்
தத்தியம்
வண்ணடை
கவற்றுமடி
நூல்யாப்பு
துருக்கு
தேவாங்கு
பொன்னெழுத்து
குச்சரி
தேவகிரி
காததூலம்
இறஞ்சி
வெண்பொத்தி
செம்பொத்தி
பணிப்பொத்தி.
கோகிலம்
பீதகம்
பச்சிலை
அரத்தம்
நுண்டுகில்
சுண்ணம்
வடகம்
பஞ்சு
இரட்டு
பாடகம்
கோங்கலர்
கோபம்
சித்திரக்கம்மி
குருதி

என்ன சொற்கள் இவை? பழக்கத்திலுள்ளவைகளாகக்—காணோமே! பொருளும் விளங்கவில்லையே, என்று யோசிக்கிறீர்களல்லவா? அர்த்தமற்ற சொற்களல்ல!

சாடின்
பாப்ளின்
ப்யூஜ்சில்க்
டபேடா

இவைபுரிகின்றன—அல்லவா? ஆடைவகைகளின் பெயர்கள், நாகரிக உலகிலே கட்டுப்படுபவர்களின் நாவிலே நர்த்தனமாடும் சொற்கள்! வெளிநாட்டு, ஆடைவகைகளின் பெயர்கள்!

அதுபோன்றவைதான் முன்னாலே நாம் பொறித்திருப்பவை. ஆடைகளின்பெயர்கள்! நம் நாட்டு ஆடைகள், பட்டாலானவை—பாண்டியனின் கொலுமண்டபத்தை அலங்கரித்தவை — ரோம்நாடு வரை சென்றவை!

இவ்வளவு வகையான பட்டாடைகளை, இங்கு, தமிழர்கள், முன்பு தயாரித்தனர். கட்டுக்கதையல்ல; இட்டுக் கட்டியதல்ல; இலக்கிய ஆதாரம். சிலப்பதிகாரத்திலே காணலாம், இந்தத் தொழிலின் சிறப்பையும், தமிழரின் நாகரீகத்தையும், வாணிபத்தையும் விளக்கும் இச்செய்தியை.

நமது பண்டிதர்கள் (புலவர்களல்ல!) வெட்டுண்டதலை, திருகிப் போடப்பட்ட கொங்கை, தீப்பட்டமதுரை, இவைகளை மட்டுமே சிலப்பதிகாரத்தில்கண்டு, மக்களுக்கு இதுகாறும் கூறிவந்தனர். இனி அவர்கள், சிலப்பதிகாரத்திலே காணப்படும், இந்தத்தொழிற் சிறப்பைநாட்டுமக்களுக்கு எடுத்துக்கூற வேண்டுகிறோம்.

பட்டாடைகளிலே மட்டும் இவ்வளவு வகையிலே தயாரித்ததமிழ் மக்கள், இன்றுள்ள, பரிதாபத்துக்குரிய நிலையிலே, ஏன் உள்ளனர், என்று யோசிக்கும்படி தமிழருக்குக் கூறவேண்டும். பாசுபதாஸ்திரம், வருணாஸ்திரம், கஜேந்திர மோட்சம், தலை அறுத்தபடலம் என்ற கந்தகளைக்கூறிக் கொண்டிருப்பதை விட, இனி, பண்டைத்தமிழகத்தின், தொழிற் சிறப்புகளை விளக்கும் சம்பவங்களைக் கூறுவது, உண்மையான நாட்டுப்பற்று ஊட்டுவதாக இருக்கும். தமிழரின் நலனைக் கோரும் நண்பர்கள் இக்காரியத்தைச் செய்யும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

தொழிற்சிறப்பு இருந்த நாட்களிலே. தமிழன் கூலியாக அல்ல, வணிகனாக வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தனர்—வீரர்களாகச் சென்றனர்.

## உதவுங்கள்!!

தாராளமாக உதவுங்கள்!!

கரூர் வழக்கு என்றால் சாதாரணமானதல்ல 9-வழக்குகள்! முக்கியமான தோழர்கள் மீது 4, 5, வழக்குகளுக்குக் குறையாமல் தொடரப்பட்டிருக்கிறது.

சிலர் தண்டிக்கப்பட்டு சிறையில் வாடுகின்றனர். பெரும்பாலோர் செஷன்ஸுக்குக் கமிட்டிசெய்யப்பட்டு ரிமாண்டிலேயே இருக்கின்றனர். ஜாமீனில் வெளியில் வந்தோரும் கரூர் எல்லைக்குள் செல்லக் கூடாதென்ற நிபந்தனை. பல தோழர்களின் குடும்பங்கள் அனாதைகளாய் இருக்கின்றன. மகன்மீது கேஸ் என்றவுடன் ஒரு தோழரின் தாய் மாண்டார். மற்றொரு தோழரின் தாய்பைத்தியம் பிடித்து அலைகிறார்.

நம் தோழர்களுக்காக எதிர்வழக்காட ஏராளமான பணம் தேவை! தேவை!! தேவை!!!

P. ஷண்முகவேலாயுதம், காரியதரிசி.
கரூர்வழக்கு நிதிக்கமிட்டி [illegible]

குறிப்பு:—

தொகை அனுப்பியவர்களின் விபரம் "திராவிடநாடு" பத்திரிக்கையில் வெளிவரும்.



வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!

சி. என். அண்ணாத்துரை எழுதிய

**புதிய வெளியீடுகள்**




விலை ரூ. 1—0—0




விலை அணா 0—12—0

ரோமாபுரி ராணிகள் ரூ. 2—4—0

**திராவிடப் பண்ணை** தெப்பக்குளம் திருச்சி.

குறிப்பு:— வியாபாரிகளுக்கு 20 சதம் கழிவு தரப்படும். தபால் செலவு வேறு. தனிப்பிரதி வேண்டுவோர் புத்தக கிரயத்தோடு நான்கு அணா சேர்த்து மணியார்டர் அனுப்பவேண்டும்.

## எளிய வாழ்க்கை

[M. N. ராய்]

எளிய வாழ்க்கை என்ற கொள்கை, ஒரு வசீகரமான ஏமாற்றுந் தேவி! அவள் பக்தர்கள் மிகுந்த ஆணவக்காரர்கள். ஆனால் தேவியின் திருவிளையாடல் யாது?

நாட்டுப் பொருளாதார முற்போக்குக்குப் பலமான முட்டுக்கட்டை போடுவதுதான். தரித்திர நாராயணியை பூஜித்து வாழும் ஏழைப் பாமரமக்கள், போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து எனக்கருதி, தமது வாழ்க்கைவசதியையே உயர்த்திக்கொள்ள முயலாது வாழுகின்றனர். அவர்களின் தேவைகள், அதிகரிப்பதில்லை. எனவே வியாபாரம் ஓங்குவதில்லை. தொழிலும் வளர வழி இல்லை.

எளிய வாழ்க்கை என்ற தத்துவம் பாமர மக்களிடம் போதிக்கப்பட்டு புகுத்தப்பட்டு வரும் வரையிலே, பொருளாதார முன்னேற்றத்தின் வழிகள் யாவும் மூடப்பட்டுத்தான் இருக்கும். உள்நாட்டுத் தொழில்களுக்குப் பாதுகாப்பு கோருவதோ, பகிஷ்காரமோ, இந்நிலையை மாற்ற உதவியாக இரா.

ஏழை மக்கள், இந்தத் தேவியின் பக்தர்களாக இருக்கும் வரையிலே, அடித்தது இலாபம் என, மேல்வகுப்பார் எனப்படும் செல்வவான்கள், நாட்டின் நல்லனயாவையையும் தாமேஆண்டு அனுபவித்து வாழுவர். எளிய வாழ்க்கை என்ற போதனையைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு சுரண்டிப் பிழைக்கும் சூழ்ச்சி இருப்பது புத்துலகப் பொருளாதார வளர்ச்சிக்கு முற்றிலும் முரண்பாடானதாகும்.

எளிய வாழ்க்கை என்ற கொள்கையை அப்படியே, கடைப்பிடித்து வாழுவது என்றால் நாம் எங்கே போய்ச் சேருவோம்! சற்று யோசியுங்கள் நமது மூதாதைகள், காட்டு மிராண்டிகளாக வாழ்ந்து வந்தார்களே, அங்குதானே போய்த் தீர வேண்டும்.

எளிய வாழ்க்கைக்குச் செல்லவேண்டும் என்று தீர்மானித்துவிட்டால், பிறகு, இவ்வளவுதூரம் வரையில்தான் போக வேண்டும் என்று வரையறுத்துக்கொள்ள முடியுமோ! அக்கொள்கையை அனுஷ்டிப்பதில் பொருத்தமுள்ளவராக நடக்க வேண்டுமானால், பரிபூரண எளிய வாழ்க்கைக்குத்தான் செல்லவேண்டும். எளிய வாழ்க்கை என்ற தத்துவத்தை போதித்துவிட்டு, அது இந்த அளவு வரையில்தான் இருக்கவேண்டும் என்று கூறுவதிலே, அர்த்தமேதுமில்லை.

இலட்சியமென்றால், அதனைக் கடைசிவரை, முழுவதும் கடைப்பிடிக்க வேண்டும். முழு எளிய வாழ்க்கையை நடத்துவதெனில், அது மனிதன் வாழ்வதற்கு வேண்டிய அளவு உணவு, உடையுடன் கூடியதாக மட்டுமே இருந்து தீரவேண்டும். அதுதான் முழு எளிய வாழ்க்கை! அதுதான் காட்டு மிராண்டி வாழ்க்கையும்! புராதனப் புனிதம் பொங்கும் அந்நிலைக்குச் செல்வதெனில், மனிதனுக்குக் கோவணமும் தேவையில்லை. பசித்தால் புசித்து, படுத்துறங்கலாம்! இயற்கையின் மடிமீது மகிழ்வுடன் படுத்துக்கிடக்கலாம்.

---

10-ம் பக்கத் தொடர்ச்சி

வரும். முதலில் கொஞ்சம் தயக்கம், பிறகு தைரியம் உண்டாகும். நாம் எதிர்பாராத இடங்களிலிருந்தெல்லாம், "இந்த வடநாட்டு ஆதிக்கத்தை நம்மால் சகிக்க முடியவில்லை. திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்" என்ற இலட்சியம்பேசப்படும். அந்த நாளைக்காணவே, இந்த நாட்களிலே ஏற்படும், இழிவுகளை, பழிகளை, எதிர்ப்புகளை எல்லாங்களைச் சகித்துக் கொள்கிறோம்-சகித்துக் கொள்வோம் — நாம் அல்ல இதிலே இதிலே முக்கியம், நாடு!

---

## பலே வேலைக்காரர்!

"ஒரு பிருமணன், சோமகுண்டிகை என்ற ஓர் கிராமத்தை, ஹர்ஷவர்தன மன்னர் தனக்கு இனாம் கொடுத்ததாக ஓர் சாசனம் தயாரித்துக்கொண்டு அந்தக் கிராமத்தாரிடம் வரி வசூலித்து வாழ்ந்து வந்தான். அதைப்பற்றி விசாரித்ததில் அவன் வைத்திருந்தது கள்ளச் சாசனம் என்று தெரியவந்தது. உடனே அந்தச் சாசனத்தை வாங்கி உடைத்தெறிந்துவிட்டு அந்தக் கிராமத்தை மேற்படி பிருமணனிடமிருந்து பிடுங்கி அரசாங்கத்தில் சேர்க்கும்படி அரசன் உத்தரவு செய்தார்."

இந்தியன் ஆன்ட்டிக் வேரி.
30ம் வால்யூம். 202-ம் பக்கம்.

மேற்கு கங்கைகுல இரண்டாம் சிவராம அரசர், சுரதாம்புரம் என்ற கிராமத்தை ஒரு அக்ரகாரமாக்கி, இருபத்திநாலு பாகங்களாகப் பிரித்து, 13 பிருமணர்களுக்கு இனாமளித்ததாக ஒரு கள்ளச் சாசனம் தயாரித்து, அந்தப் பிருமணர்கள் அனுபவித்து வந்தனர். சாசனம் கி. பி. 807-ம் ஆண்டு தயாரித்தது. ஏறக்குறைய 73 ஆண்டுகளுக்கு முன்பு சர்க்காரால், இது கள்ளச் சாசனம் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

"காஞ்சேஜ் அரசன் விஜயச் சந்திரனுடைய! வேலைக்காரனான தேவு என்பவனுக்கு ஓர் பிருமணன் இலஞ்சம் கொடுத்து கலாஹண்டி, படாப்பி, என்ற இரண்டு கிராமங்களை தனக்கு விஜயச்சந்திர அரசன் மானியம் கொடுத்ததாக கள்ளச் சாசனம் ஒன்றுசெய்து வைத்துக்கொண்டு அந்த இரண்டு கிராமங்களையும் ஆண்டனுபவித்து வருகிறான். அவன் எவ்வித ஒழுக்கமுமுள்ளவனல்ல. ஒரு ஊசி முனை அளவுநிலத்தைக்கூட மானியமாகப் பெற அவன் தகுதியுள்ளவனல்ல. ஆகையால் அந்த இரண்டு கிராமங்களையும் அந்தப் பிருமணனிடமிருந்து கைப்பற்றி, எனது குமாரர்களாகிய நீங்களே அவற்றின் மாசூலின் மேல்வாரம் வரி முதலியன வசூலித்து அனுபவிக்க வேண்டியது."

என்று 1173ம் ஆண்டு ஜபில நகரத் தலைவனான மகாநாயக் கபிரதாபவாலா என்பவர், தமது குமாரர்களுக்கு எழுதி வைத்த சாசனம் தெரிவிக்கிறது.

★

## காலம், வரவில்லையா?

---

**'திராவிட நாடுப் பிரிவினை தேவையா இல்லையா என்பதுபற்றி திட்டமான, முடிவான, பதில், நான் இப்போது கூறப்போவதில்லை. ஏனெனில் திராவிட நாட்டைத் தனி நாடாகப் பெற்றே தீரவேண்டுமா என்பது பற்றி அறுதியிட்டுக் கூறும் காலம் வரவில்லை'**

என்று சர். சண்முகம், 1941, ஜனவரியில், பொற்கற் புதுநாளன்று சென்னை, மெமோரியல் மண்டபத்தில் தமிழ்த் திருநாள்சொற்பொழிவாற்றுகையில்கூறினார்.

1941ல் !—இன்னம் காலம்வரவில்லை!—என்று கூறினார்.

1947—திராவிட நாடு பிரிவினை தினத்தை நாமெல்லாம் கொண்டாடுகிறோம். முஸ்லீம்களோ, பாகிஸ்தான் பெற்றுவிட்டார்கள். சர். சண்முகம், இன்று, என்ன சொல்கிறார்? காலம், இன்னும் வரவில்லை என்கிறாரா? திராவிட நாடு தேவையா அல்லவா என்பது பற்றி அறுதியிட்டு இப்போதாவது கூறலாகாதா? யோசித்து, ஏதேனும் முடிவுக்கு வந்திருக்கிறாரா? யோசித்துக் கொண்டேதான் இருக்கிறாரா? யோசிக்காமலேயே விட்டு விட்டாரா? ஆண்டு ஆறுஆகி விட்டன! அறிஞர் சண்முகம், இந்தப் பிரச்னைக்கு 'வாய்தா' போட்டு. இந்தப் பிரச்னையோ, நாளுக்கு நாள் வளருகிறது—இனத்தின் இருதய கீதமாகிறது—இதை சர். சண்முகம் அறிந்து, இன்றேனும், இந்தப் பிரச்சினை பற்றி அறுதியிட்டுத் தமது அபிப்பிராயத்தைக் கூறவேண்டுகிறோம்.

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

தனித்தனி இடமும் ஆட்சியும் இருந்தால்தான் அந்தந்த இனமும், மற்றவைகளிடம் சம உரிமை, சம அந்தஸ்து பெறமுடியும்.

13. இந்தியா ஒரே நாடாக இருக்கிறது என்று கூறித்தான் ஆரியர்கள், இமயம் முதல் குமரிவரை உள்ள இடத்தைத் தமது வேட்டைக்காடாக்கிக்கொண்டு, அரசியலில் அதிகாரிகளாய், கல்வியில் ஆசான்களாய் மதத்தில் குருமார்களாய், சமுதாயத்தில்பூதேவர்களாய்,பொருளாதாரத்தில் பாடுபடாது உல்லாச வாழ்வு வாழக்கூடியவர்களாய் இருக்கவும், மற்ற இனத்தவர் தாசர்களாய், பாட்டாளிகளாய், உழைத்து உருவின்றி சிதைபவர்களாய், வாடவும் நிலைமை ஏற்பட்டது. இந்தக் கொடுமை நீங்க, வர்க்கத்துக்கொரு வட்டாரத்தைப் பிரிப்பதுதான் சிறந்த வழி.

14. ஒரு இனத்திடம் மற்றொரு இனத்துக்கு நம்பிக்கை இல்லை. ஒரு இனத்து ஆட்சியின் கீழ் மற்றொரு இனம் இருப்பது என்று சொன்னாலே அச்சம் உண்டாகிவிட்டது. அச்சமும் அவநம்பிக்கையும் பெற்றெடுக்கும் குழந்தையே பயங்கரப் புரட்சி. இந்தப் பயங்கரப் புரட்சியைத் தடுக்கவே, இப்போது பிரிய வேண்டும் என்கிறோம்.

15. இந்தியா பிரியாது இருந்ததால் இதுவரை, ராணுவ பொருளாதார அறிவுப் பலம் வளர்ந்ததாகவோ, இந்திய இனம் என்ற புது சமுதாயம் அமைந்ததாகவோ கூற எந்த ஆதாரமும் இல்லை. ஒரு இனத்தின் குரல்வளையை மற்றொரு இனம் அழுத்தி நெரித்துக் கொல்லாது போனதற்குக்காரணம் எல்லா இனத்தையும் பிரிட்டிஷ் துப்பாக்கி ஏககாலத்தில் அடக்கி வைத்திருந்ததால்தான். எனவே பிரிட்டிஷ் பிடி போய்விட்டால், இந்தியா இரணகளமாகும். இதற்கு ஐரோப்பாவில்—அடிக்கடி நடக்கும் போர் ஒரு உதாரணம். எனவே இத்தகைய இன்னல்கள் உண்டாகாதிருக்க, இனவாரியாக இடம் பிரித்து விடுவதே, ஆபத்தைத் தடுக்கும் வழி.

எனவே, இனவாரியாக இந்தியா பிரிந்தால், இன இயல்புகள் தனித்து, தனிச் சிறப்புடன் விளங்கவும், ஆரிய ஆதிக்கம் அடங்கவும் பொருளாதாரச் சுரண்டல் போகவும், அறிவை அடக்கும் அவதி நீங்கவும், எதிர்காலத்தில் பூசல் எழாதிருக்கவும், சாந்தம், சமாதானம், நிலவவும் மார்க்கமுண்டு. எனவேதான் இந்தியா இனவாரியாகப் பிரியவேண்டும் என்று; இந்தியாவை இனப்போர்க்களமாகக் காணக்கூடாது என்ற நல்லநோக்கம் கொண்டவர்கள் கூறுகின்றனர். இதை மறுப்பவர்கள், சரித்திரத்தை மறந்தவர்களாக இருக்க வேண்டும். இல்லையேல் சரித்திரத்தை மக்கள் தெரிந்துகொள்ளவில்லை என்ற எண்ணங்கொண்டவர்களாக இருக்கவேண்டும். ஒரே இன இயல்பு அதாவது ஆரிய ஆதிக்கம், மற்றவைகளை மிதித்துத் துவைத்து அழிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணங்கொண்டவர்களும், வலுத்தவனுக்கு வாழ்க்கைப்படும் வனிதைபோல, இந்தியாவைச் செய்துவிட்டு, தாங்கள் வாழ எப்படியேனும் வழிசெய்துகொள்ளவேண்டும் என்ற கெடுகால யோசனையுங் கொண்டவர்களே, இந்தப் பிரிவினைத் திட்டத்தை எதிர்ப்பர்.

இன்னோரன்ன காரணங்களையும், ஆரிய ஆதிக்கம் வளர்ந்தவிதம் அதனால் பிற இயல்புகள் அழிந்த கொடுமை, இனி ஆரியத்தை அடக்கித் தீரவேண்டியதன் அவசியம் ஆகியவைகளை ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டினேன். இந்தத் திட்டத்தை எதிர்ப்பவர்களின் வாதங்கள் வலாதவையென்று விளக்கினேன். காரணங்களை அவர்கள் கதைகளால் வீழ்த்தவும், ஆதாரங்களை வெறும் அளப்பினால் அடக்கவும், சரித்திரத்தை சவடாலால் சாய்க்கவும், உறுதியை உறுமிக் கெடுக்கவும், நமது எதிரிகள் முனைந்து நிற்பதைப் பொருட்படுத்தாது நம் கடனை நாம் செய்தல் வேண்டும் என்று கூறினேன்.

* * *

இஸ்லாமியர்கள், இந்த உண்மைகளை உணர்ந்து, தங்கள் தலைவரின் திட்டத்தின்படி பணிபுரிந்து வெற்றி பெற்றுவிட்டனர். வடக்கே, இன அரசு, பாகிஸ்தான் ஏற்பட்டுவிட்டது.

அவர்கள் எந்த இலட்சியத்துக்காகப் போராடி வெற்றி பெற்றார்களோ, அந்த இலட்சியத்தை, அவர்கள், முழக்கமாகக் கொள்ளாததற்கு முன்பு நாம் கொண்டோம்; அவர்கள், லாகூரில் பாகிஸ்தான் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு முன்பு நாம் திராவிடநாடு திராவிடருக்கே என்று தீர்மானஞ்செய்தோம். நாடெங்கும், இந்த இலட்சியத்தை விளக்கிப் பிரசாரம் செய்தோம்—செய்து வருகிறோம்.

பாகிஸ்தான், தேவையென்பதற்குக் கூறப்பட்ட காரணங்களைவிட, அதிகமான, சிலாக்கியமான காரணங்கள், திராவிடத் தனி அரசு தேவை என்பதற்கு, உள்ளன. ஆனால், திராவிடப் பெருங்குடி மக்கள், இதனை இன்னும் உணர்ந்ததாகக் காணோம்.

★

## 14ல ஜூலை
## திருச்சியில்
## நீதிதேவன் மயக்கம்

### நேஷன்

நேஷனுவிடி (ஒரு தேசீய இன மக்கள் உணர்ச்சி) என்பது ஒரு உணர்ச்சி என்பதைத் தவிர வேறு விதமாக என்னால் விளக்க முடியாது. எப்படிப்பட்ட உணர்ச்சி என்றால், ஒரு கூட்ட மக்கள் தம்மை உறவின் முறையோர் ஒரு இலட்சியக்காரர், ஒரு குடி மக்கள், என்று உறுதியாக நம்பும்படியான உணர்ச்சி. இதுதான் நேஷன் என்பதற்குச் சிறந்த இலட்சணம்.

பேராசிரியர் ஹாலந்து ரோஸ்.

### மாவீரன் மொழி

"உயர்ந்த ஜாதி என்று கர்வம் கொண்டிருக்கும் பிராமணர்களுக்கும், ஜாதிக் கட்டுப்பாட்டையே பெரிதாகக் கருதும் காயஸ்தர்களுக்கும், மகாராஷ்டியர்களுக்கும் மனஸ்தாபம் உண்டாகும் என்று நான் யூகிக்கிறேன். நம்மைப்பற்றியே நான் [illegible] கிறேன்."

என்று, மராட்டிய மண்டலாதிபதி, சத்ரபதி சிவாஜி, தமது மரணப் படுக்கையில் கூறினதாக சுதேசமித்திரன் வார இதழ் (14—1 40) 22ம் பக்கத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

# தமிழக வரலாறு வேண்டும்

★

நாட்டுப்பற்று, சித்தத்தைப் பறி கொடுக்காதிருக்கும் எவருக்கும் இயல்பாக ஏற்படக்கூடியதே. ஆயினும், அந்தப் பற்று, தெளிவு பெற்று, உரம் பெறுவதற்கு உறுதுணையாக இருப்பது, நாட்டு வரலாறு.

நாட்டு வரலாறு மூலமே, அந்நாட்டு மக்கள், தங்கள் நாட்டு வாழ்வையும் தாழ்வையும், தாழ்வு நீங்கி மீண்டும் வாழ்வு பெறுவதற்கான வகையையும், பெற முடியும். முன்னாள் வீரர்கள், பேரறிவாளர்கள் ஆகியோரை வரலாற்றுச் சுவடிகளிலேதான் காண முடியும். வாணிபச் சிறப்பு, நாட்டு வளம், ஆகியவற்றைத் தெரிந்து கொள்ள முடியும். வீணைக்கு நரம்பு போல், நாட்டுவரலாறு அமையும்.

தமிழ் நாட்டிலே, இந்த உணர்ச்சி இல்லை — மங்கிவிட்டது. ஏன்? தக்கதோர் வரலாற்றுச் சுவடி இல்லை. தமிழன் காண்பது, இந்து தேச சரித்திரம்— தமிழக வரலாறு அல்ல. இந்துதேச சரித்திரம் என்ற பெயரால், தமிழன், வடநாட்டிலே முளைத்து முளைத்துக் கருகிய வல்லரசுகள், சரிந்த சாம்ராஜ்யங்கள் ஆகியவற்றைப் பற்றியே படிக்க நேரிடுகிறது. இடையிடையே சிறு சிறு துண்டு துணுக்குகளாகத் தரப்படுகிறது தமிழக வரலாறு. எனவேதான், இயற்கையாக ஏற்பட வேண்டிய நாட்டுப் பற்று, சரியான முறையிலும், உருவிலும், தமிழனுக்கு உண்டாகவில்லை. தமிழனின் மனக் கண்களின் முன்பு, சேரன் செங்குட்டுவன் தோன்ற வேண்டும், பூம்புகார் தெரியவேண்டும், பொற்கைப் பாண்டியனும், கரிகால் சோழனும் தெரியவேண்டும், சங்கமும் அதிலே வீற்றிருந்த பெரும் புலவர்களும் தெரியவேண்டும், அந்தக் காட்சிகளை இன்றுள்ள இந்துதேச சரித்திரத்திலே காண முடிவதில்லை; அதிலே சூதாடிய பாண்டவர், துகிலிழந்த துரௌபதி, வனம் புகுந்த இராமன், சுடலை காத்த அரிச்சந்திரன், எதிரிக்குத் துணைபோன ராஜபுத்ரன் இப்படிப்பட்ட காட்சிகளே நிரம்பி உள்ளன. எனவே, தமிழகத்தின் வரலாறு, ஆராய்ச்சியாளர்களால் தக்கவிதத்திலே தொகுக்கப்பட வேண்டும்.

இந்தக் கருத்தை வலியுறுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும், தமிழ்ப் புலவர் பெருமக்களுடையது. ஆனால் அவர்கள் இதுகாறும் இதனைச் செய்தாரில்லை. செய்யவேண்டும் என்று அவர்களையும், பொதுவாகவே தமிழரையும் தூண்டும் முறையில் நண்பர் அ. கிருஷ்ணமூர்த்தி எனும் தமிழறிஞர் தீட்டிய கட்டுரையை இங்கு வெளியிடுகிறோம். யாரோ ஒரு சிலர் மட்டுந்தானே, தனி நாடு, தனிப் பண்பு, தனி இனம் என்றெல்லாம் பேசுகிறார்கள், என்று எண்ணுபவர்கள், ஏன், பெரும்பாலான மக்களுக்கு, தமிழ் நாடு தனிப் பண்புள்ளது என்பது விளங்கவில்லை என்பது தெரிய, இக்கட்டுரை பயன்படும். நாட்டுக்கு ஒரு நல்ல வரலாறே தொகுக்கப்படாத நிலையில், எங்கிருந்து, நாட்டுப்பற்றுப் பெரும்பாலான மக்களுக்கு ஏற்பட முடியும்? தோண்டா முன்னம் ஊற்று இல்லை, தொகுத்திடா முன்னம் வரலாறு இல்லை! வரலாறு இல்லா முன்னம், நாட்டுப் பற்று உரம் கொள்ள முடியாது.

இந்த நாள், அவரவர் நாட்டை அவரவரே ஆளுதலே முறை என்ற கோட்பாடு, வலியுறுத்தப்பட்டு வருகிறது. வடக்கே இஸ்லாமியர்கள், தாயகம் பெற்றுவிட்டனர் —தனி அரசு அமைத்துக் கொள்கின்றனர். நாமோ, வடநாட்டிலே உள்ள 'மிச்ச இந்தியாவுடன்' இணைக்கப்பட்டிருக்கிறோம். இந்நிலை நீங்கி, நாமும் தனி அரசுரிமை பெறவேண்டுமென்பது நமது இலட்சியம். அந்தச் சிறந்த இலட்சியம் நாட்டுக்குத் தக்கதோர் வரலாற்றுச் சுவடி இல்லாததால், பெரும்பாலான மக்களின் மனதிலே பதியவில்லை. தனி நாட்டையும் தனி அரசுரிமையையும் கேட்கும், நாம், நமது மக்களுக்கு தமிழக வரலாற்றையும் கூறியாக வேண்டும். நமது நாட்டு அறிஞர்கள், அந்த வரலாற்றுச் சுவடியைத் தயாரிக்க ஒரு குழு அமைத்துக் கொள்ள வேண்டும். இந்தக் கட்டுரை இந்த ஆவலைத் தூண்ட வேண்டுமென்பது நமது நோக்கம்.

சில நூற்றாண்டுகளாக இந்தியா என வழங்கப்படும் இந்நாட்டைப் பற்றி எழுதப்பட்ட வரலாற்று நூல்கள் பலப்பல எனினும், முடிவாக அறுதியிட்டு எழுதப்பட்ட இந்திய வரலாறுகளிலும் அவற்றின் அமைப்பில் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன என்றும், அவற்றைத் திருத்தியமைக்க வேண்டுமென்றும் இமய முதல் குமரி வரையுள்ள வரலாற்றுப் பேராசிரியர்கள் பலரும் நெடுநாளாகவே கருதி வருகின்றனர். இக்கருத்தில், கட்சிக்கொள்கையோ, அல்லது மாறுபட்ட எண்ணமோ கிடையாது.

அக் குறைபாடுகள் பலவற்றுள் மிகச் சிறந்த ஒரு பெருங் குறைபாடு பற்றித் தற்காலத்தில் பெருங் கிளர்ச்சி நடந்து வருவதைத் தமிழர்கள் அறிவார்கள், அதனை இங்கு சுருக்கமாக விளக்கி, பின்னொருகால் அதுபற்றி விரித்து வரைய விரும்புகிறேன்.

### தமிழக வரலாறு நல்ல இடம் பெறவில்லை

இந்திய வரலாறு எனக் கூறப்படும் நூலில், எடுத்தது திராவிடர் வருகை(?)யும் ஆரியர் வருகையும் கூறப்படுகின்றன. பின்னர் இராமாயண பாரதங்களும், புத்தரும் மகாவீரரும் இடம் பெறுகின்றனர். அதன் பின் அலெக்சாந்தர், படையெடுப்பும், மௌரிய மன்னர்கள் ஆட்சியும், குப்தர்கள் ஆட்சியும், பிறவுமாக வரலாறு நெடுகச்சென்று விடுகிறது.

இவற்றிற்கிடையில் தமிழ்நாட்டில் செங்கோலோச்சிய முடியுடை வேந்தர் மூவர் செய்திகளும் வடநாட்டுச் செய்திகளை நோக்க மிக மிகக் குறைவாகக் கூறப்படுகின்றன. அப்பகுதியைக் கடந்து சென்றால் 8, 9 ஆம் நூற்றாண்டிற்குப்பிறகு இடைக்காலத்துச் சோழ பேரரசர்களான இராசராசன், இராசேந்திரன், குலோத்துங்கன் என்ற இவர்பற்றிய செய்திகளும், அங்ஙனமே கூறப்படுகின்றன. பண்டை வரலாற்றை வரைவதற்கு வட நாட்டிற் கிடைக்கும் கருவிப் பொருள்களைவிடத் தென்னாட்டில் அவ்வளவாக, அப்பொருள்கள் குறைந்துவிடவில்லை. அங்ஙனமிருந்தும் தமிழகத்து வரலாறு, இந்திய வரலாற்றில், நல்ல இடம் பெறு

மலே இருந்து வருகின்றது. அதாவது, வடநாட்டு வரலாறு விரித்துக் கூறப்படுமளவு, இந்நாட்டு வரலாறு விளக்கப்படவில்லை என்பது.

### மூன்று காரணங்கள்

இங்ஙனம் குறைவுபட்டமைக்குக் காரணம் மூன்று வகையாகப் பகுக்கலாம். ஒன்று; இந்திய வரலாறு எழுதப்பட்ட காலத்தில் தென்னாட்டைப் பற்றிய கருவிப் பொருள் மிகுந்து கிடைக்கவில்லை என்பது. இரண்டு: கருவிப் பொருள்கள் கிடைத்த பின்னும் அவற்றைப் போற்றி அடுத்து எழுதப்படும் நூல்களில் விரித்துக்கூறாமல் பழைய அடிச் சுவட்டையே பின் பற்றிப் புறக்கணித்துப் போவது. மூன்று, வேண்டுமென்றே இந்நாட்டு வரலாற்றை மறைத்தும் சுருக்கியும் வரைவது. இவற்றுள் முதலிற்கூறிய காரணம் இந் நூற்றாண்டின்தொடக்கத்தில் செல்லுபடியாக இருந்ததாயினும், இன்றைய நிலையில் அதனை முழுவதும் வைத்து ஒப்புக் கொள்ள முடியாது. வடநாட்டு வரலாற்றிற்குக் காட்டப்படும் பெருதவியை நோக்கும் போது, அக்காரணம் அடியோடு ஒதுக்கக் கூடியது எனவும் கூறலாம். ஏனெனில், வடநாட்டு வரலாறு எந்தெந்த வகையில் விரித்துக் கூறப்படுகிறதோ அவ் வகையிலெல்லாம் தமிழ் நாட்டு வரலாற்றையும் ஏறத்தாழ விரித்துக்கூற முடியும் என்பதே.

இரண்டாவது காரணம்: இந்திய வரலாறு முழுமையும் பெரும்பாலும் வடநாட்டாராலும், ஆங்கிலேயராலும் எழுதப்பட்டுள்ளன. ஆதலின் தென் கோடியிலுள்ள தமிழ் நாட்டைப்பற்றியோ, அதில் கிடைத்துள்ள கருவிகளைக் கொண்டு ஆராய்ந்து அதன் விரிவுகளை விளக்குவது பற்றியோ அவர்கள் கவலை கொள்வதில்லை. அவர்களும் ஆங்கிலேயர்கள் தமிழகத்தைப் பற்றிக் கூறுவதைவிட வடநாட்டவர் குறைவாகவே எழுதுகின்றனர்.

இவ்விடத்தில், என் தமிழ் நாட்டார் அதனை எழுதக் கூடாதா எனக் கேள்வி எழும்; அதற்குத்தான் மூன்றாவது காரணம் குறிக்கப்பட்டது.

இந்நாட்டில் இந்திய வரலாற்றை எழுதப் புகுந்தவர் மிகச்சிலர். அவருள்ளும், தமிழர் நன்மையைக் கருதாத வஞ்சக நெஞ்சத்து மக்கள் மிகப்பலர். மிஞ்சி நின்றவர் அவரையொட்டிச் செல்லுவதோடு, தமிழகத்தைப் பற்றிய சிறு கருத்தும் இல்லாதவர். இவரையெல்லாம் கடந்து ஒரு சில தமிழர், எழுதத் தொடங்கினால், அதற்கு நல்லுதவியும், நன்மதிப்பும் கிடைப்பதில்லை. மாறாக அவர்கள் வாழ்க்கையே அழிந்து விடும் வகையினும் கெடுதல்கள் செய்தனர்; செய்கின்றனர்; செய்வதைத் தடுக்கவே கிளர்ச்சி நடக்கின்றது.

ஆகவே, தமிழகத்தின் வரலாறு நன்கு விளக்கப்படவில்லை என்றால், அதற்குக் கடைசியில் கூறிய காரணமே, மிக் வலிமை யுடையதாகும். சிறிது விளக்கிக் கூறினால், தாய்நாட்டில் விளக்கப்படாத வரலாறு, பிற நாட்டவரால் விளக்கப்படும் என எதிர்பார்க்க முடியாது எனலாம்.

### ஆராய்ச்சி முயற்சியே தொடங்கவில்லை

தென்னாட்டுச் சிறப்பை விளக்குவதற்கு அதன் பல பகுதிகளை இன்னும் தோண்டிப் பார்க்க வேண்டுமென்றும், அம்முயற்சியே இன்றும் நன்கு தொடங்கப்படவில்லை என்றும் தோழர் இராமலிங்கஞ் செட்டியாரவர்கள் கூறியதைப் பார்ப்பனர் மறைத்தும் பழித்தும் எழுதிய எழுத்துக்கள் இன்னும் காய்ந்துவிடவில்லை என்பதை இங்கு நினைவூட்டுகிறேன். தோண்டுவதற்கென்று வடநாட்டில் செய்யப்பட்ட அளவு இந்நாட்டில் செலவு செய்யப்படவில்லை. ஊக்கமும் காட்டவில்லை. இதற்கு அரசியலாரும் தமிழர் நன்மையைக் கருதாத வடவாரியரும் காரணராவர் என்க.

இனி, இவ்வாறு முயன்று ஆராய்ந்து முடிவுகள் கண்டாலும் கூட, பின்னும் இடர்ப்பாடுகள் இல்லாமல் இல்லை. வடநாட்டு வரலாறு போகின்ற போக்கில், தென்னாட்டுச் செய்திகள் அதனுடன் தொடர்ந்து செல்லுவதில்லை. எடுத்துக் காட்டாக வடநாட்டு வரலாறு, ஆரியர்கள் வருகை முதல் கில்ஜிவமிசத்து அல்லாவுதீன் கால் வரை அதாவது பதினென்கா நூற்றாண்டின்தொடக்கம் வரை நீண்டு சென்று கொண்டிருக்க, தென்னாட்டு வரலாறு அவர்களுக்கு முற்றும் வேறுபட்ட தனி மன்னர்களின் கீழ் வேறொரு வகையாகப் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே இரண்டு நாடுகளின் வரலாற்றையும் ஒன்றாகக் கூறத் தொடங்கினால் ஒன்றைக் கூறும்போது மற்றொன்றை நிறுத்திவைக்க வேண்டும். இங்ஙனம் இருவேறு வரலாற்றையும் பிணைத்து எழுதுவது ஒரு போலி வேலையாகவும் பயனில் செயலாகவும் முடியும். இல்லையேல் அதனை (Comparison History) என்க்கூற வேண்டும். எனவேதான் தமிழ் நாட்டின் வரலாறு தனிப்பட்ட தென்பதோடு, அதனை விரித்து விளக்கவும் வேண்டும் என்கிறேம்.

### சில கருத்துக்கள்

அங்ஙனம் எழுதப்படுகின்ற நாள் வரை இந்தியாவுக்குள் தமிழகத்தையும் உட்படுத்தி வரலாறு எழுதுவோர், யான் கூறும் சில கருத்துக்களையும் நடுநின்று நோக்கவேண்டுகிறேன்.

இராமாயண பாரதங்கள் வரலாற்றில் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளதையும், அவை முற்றும் வரலாற்றோடு வைத்து எழுதப் பயன்படுவதில்லை என்பதையும் அனைவரும் அறிவர். இராமாயணம், ஆரிய திராவிடர்களின் போராட்டத்தை விளக்குவதென்பது முடிந்த முடிபு. பாரதம், வடநாட்டு வரலாற்றின் தொடக்க காலத்தில் அங்கிருந்த சில மன்னர்களின் நிலைமையையும், அக்காலத்து நாகரிகத்தையும் விளக்கப் பயன்படும் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இக்காரணங்களால் இவ்விரண்டு நூல்களும் 'இந்திய வரலாற்றில்' வைத்து விளக்கப்படுவதும், போற்றப்படுவதும் காணும் போது அவற்றைவிட வரலாற்றுத் துறையில் பெரிதும் பயன்தரக்கூடிய சான்றுகள் மிக்க சிலப்பதிகாரம் மணிமேகலைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தாழ்ந்த இடம், நமது நினைவுக்கு வருகின்றது.

### சிலப்பதிகாரம் மணிமேகலை தமிழ் நாகரிகத்தைக் காட்டவா?

இந்தியா எனும் பெருநிலத்தில் வடநாடு, தமிழகம் இரண்டையும் சேர்ந்தமைந்து, வடநாட்டுக்கு இராமாயண பாரதங்களைக் காட்டி, வரலாறு வரைகிறார்கள். தமிழ்நாட்டுக்குச் சிலப்பதிகாரம் மணிமேகலைகளைக் காட்டுவதேயில்லை. நாட்டுமிராண்டித்தன [illegible]லிருந்து விடக்கும்

(அடுத்த பக்கம் பார்க்க)

# ஆசிய கலாசாரம்

ஆசிய நாடுகள் அனைத்தும் ஒரே கலாசாரம் உடையன. ஆத்மார்த்த ஞானத்தை அவனிக்கெல்லாம் தந்தது ஆசியா. மேல்நாட்டின் கூட்டுறவாலேயே ஆசியா, தனது பூர்வீகப் புகழை இழந்து கிடக்கிறது. இனி உலகம் போற்ற ஒளி வீசும். ஆசியாவின் நடு நாயகமாக இனி இந்தியா விளங்கும். உலகாயதத்தால் பிணைப்புண்டு கிடக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கு, ஆசியாதான் வழி காட்டப் போகிறது. இதில் இந்தியாவின் பங்கு பெரிது. இவைபோன்ற பலப்பல பேசப்பட்டன, டில்லிநகரில் இரண்டு திங்கள் முன். எகிப்து முதல் ஜாவா வரையில் பலநாடுகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். முஸ்லிம் லீக் இதில் பங்குகொள்ளவில்லை. ஆசியா கலாசாரம் அறிந்திராத காரணத்தால்போலும்!

கலாசார அடிப்படையில் கட்டுண்டு, தங்களை மறந்து பங்கெடுத்துக்கொண்ட நாடுகளாவது, அந்தப் புகழ்பெற்ற கலாசாரப் பெருமையைக்காப்பாற்றக்கூடாதா? உலகுக்கு வழிகாட்டும் பண்பு உடையதாகக் கூறப்பட்டது, அதனை இதற்குள் மறந்துவிட வேண்டுமா? உலகாயதமும் பற்றுந்தான் ஐரோப்பிய நாடுகளை அலைக்கழிக்கின்றன என கேலி பேசினார்களே, அந்தக்குற்றம் ஆசிய நாடுகளுக்கே கிடையாதென வாயளந்தார்களே, இதனை மெய்ப்பிக்கவாவது தக்கமுறைகளைக் கையாளக் கூடாதா?

1

ஆசிய நாடுகளில் பர்மாவும் ஒன்று, மாநாட்டிலும் கலந்துகொண்டநாடு. பண்டித நேருவின் நெருங்கிய நண்பர் அவுங்சான் அவர்களைத் தலைவராகக் கொண்ட நாடு. பர்மாவில் ஒரு அவசரச் சட்டம் பிறந்திருக்கிறது. பர்மாவின் எல்லைப்புறத்தில், இந்திய, சீன, சையாம் தரை வழியாக பர்மியரல்லாதவர்கள் பர்மாவிற்குள் குடியேறிவிடுகிறார்களாம். அவர்களைத் தடைப்படுத்தவே இச்சட்டமாம். இதனைக்கண்டு இந்திய சர்க்கார் கோபிக்கிறது. இந்நாடுகளின் இராஜிய உறவிற்கு பங்கம் விளைவிக்குமாம். நடைமுறைக்கும் பொருத்தமற்றதாம். போர்க்காலத்தில் பர்மாவிலிருந்துவந்த இந்தியர்கள் பிரச்னையைத் தீர்ப்பதில் இது சிக்கலை உண்டாக்குமாம். இதனைக் கண்டிப்பான உத்தரவு மூலம் கண்டிப்பாகத் தெரிவித்துவிட்டது இந்திய சர்க்கார்.

இந்த விவகாரத்தில் ஆசிய கலாசாரத்தை எந்த இடத்திலும் பார்க்க முடியவில்லை. வெவ்வேறு நாட்டின் விவகாரமாகத்தான் இது இருக்கிறது. ஐரோப்பிய நாடுகளின் போக்கில் இது எந்த இனத்தில் வேற்றுமை உடையதோ? ஆசிய கலாசாரக்காப்பாளர்கள்தான் இதற்கு விளக்க முரைக்கவேண்டும்.

2

முன்னையதிலும் இது விசித்திரமானது; விபரீதமானதுங்கூட. மத்திய மாகாணத்திலே காங்கிரஸ் பிரதமர் சுக்லா, ஆசிய கலாசாரத்தின் மேன்மையை நன்கு கையாள முனைந்திருக்கிறார். பாகிஸ்தான் ஏற்பட்டுவிட்ட காரணத்தால் மற்றப் பகுதிகளில் உள்ள முஸ்லிம்கள் 'அன்னியர்களாக' ஆகிவிட்டார்களாம். மற்றவர்களுக்கு இருக்கும் சலுகை அவர்களுக்கு இருக்காதாம். தற்சமயம் அவர்களுக்குத் தெரிந்தவரும் கல்வி மானியம் நிறுத்தப்படுமாம். அரசாங்க அலுவல் அவர்களுக்கு மறுக்கப்படுமாம். சட்டசபைகளிலும் இடமிருக்காதாம். தற்போது மந்திரிசபையில் இருக்கும் முஸ்லிம் கனவானும், பதவியை விட்டுவிடவேண்டுமாம். வார்தா ஆஸ்ரமத்திற்குக்கூட, அவர் வரக்கூடாதாம். இதுவே சுக்லா உள்ளத்திலே உருவாகி இருக்கும் கலாசாரப் பண்பு. இவருக்கு மட்டும் சொந்தமானதா? இல்லை! இவரைப்போன்று இல்லாதவர்களைக் கிள்ளக் கிட்டுவிடலாம்!

ஆப்பிரிக்காவிலே இந்தியர்களுக்கு [illegible] நடத்தப்படுவதில்லையென்று [illegible], இந்தப் போக்கை [illegible] செய்வது? ஆசிய கலாசாரத்தின் [illegible] மேன்மையே போன்மை!

3

ஜப்பானும் ஆசியநாடுதான்; சைனாவும் ஆசியநாடுதான். ஜப்பானிய [illegible] தொழில் பெரிய அளவிற்கு கெடுக்கப்பட்டுவிட்டது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியை இனித் துவங்க வேண்டியதுதான். இதனைக் கேட்டதும் சைனாவிற்கு தனிப்புழுக்கம் உண்டாகிவிட்டது. சைனா உற்பத்தி செய்யும் ரகங்களை ஜப்பான் உற்பத்திசெய்யாமல் தடை செய்ய வேண்டுகிறது. மலாய் மார்க்கெட்டும் ஜப்பானிடம் போய்விடுமேயென்று கவல்கிறது. சைனாவின் லாபமற்ற வியாபாரப்போக்கில் மேலும் சங்கடம் உண்டாகுமே என்றும் பதறுகிறது. வெளிப்படையாகக் கூற வேண்டுமானால் ஜப்பான் தொழில் வளர்ச்சி, சைனாவிற்கு அறவே பிடிக்கவில்லை. கலாசார ஒற்றுமையை இங்கும் காணமுடியவில்லை. எங்குதான் ஆசிய கலாசார அடிப்படை அமைந்திருக்கிறதோ?

—

5-ம் பக்கத் தொடர்ச்சி

இராமாயண பாரதங்கள், அவை நிகழ்ந்த காலத்து நாகரிக வரலாற்றைக் காட்டுமானால், எமது சிலப்பதிகார மணிமேகலைகள், அக்காலத்துத் தமிழ் நாட்டின், உயரிய நாகரிகத்தைப் பளிங்குபோல எடுத்துக் காட்டும். சிலப்பதிகார மணிமேகலைகள் வரலாற்றுக்குப் பயன்படா எனக் கூறுவார்களாயின், இராமாயணபாரதங்கள் வரலாறு இருக்கும் பகுதியை எட்டிப் பார்க்கவும் தகுதியுடையன அல்ல.

வடநாட்டு இராமன் தென்னாட்டுப் பெருவேந்தனோடு போர்செய்தானென்றால்—அதனைக் காட்டுமிராண்டித்தனமான முறையில் இராமாயணம் விளக்கிக் கூறுகிறதென்றால் தென்னாட்டுத் தமிழ் வேந்தன் ஆரிய மன்னனின் முடித்தலை நெரியவைத்த செய்தியையும், அக்காலத்து அந்நாள் பரந்த அருமைத் தமிழ் நாகரிகத்தையும் நாகரிகமான உயரிய மொழிகளால் வைத்துக் கூறுகின்றது, எமது சிலப்பதிகாரம். இதற்குச் சான்றுகள் வேண்டுமானால், பலப்பல கூறக்கூடும். இயல் பகுதியாலும், இசைப் பகுதியாலும், நாட்கப் பகுதியாலும் மொழிப் பகுதியாலும், சமயப்பகுதியாலும், நாகரிகப் பகுதியாலும், வரலாற்றுப் பகுதியாலும் வேறு எப் பகுதியாலும் ஒரு சிலப்பதிகாரத்தை ஒரு இராமாயணம் வெல்லுங்கொல்? ஒவ்வாது! ஒவ்வாது! அத்தகைய சிறந்த நூலுக்கும், அதனையடுத்த மணிமேகலைக்கும் இடங்கொடாத பொழுது, இராமாயண பாரதங்கட்கு எவ்வாறு வரலாற்றில இடம் கிடைத்தது? இவ்வுண்மை வரலாற்றுத் துறைப் பேரறிஞர்கள் கருதிப் பார்க்க வேண்டுகிறேன்.

Edited Printed Published by C. N. Annadurai M.A., at
Dravida Nadu' Press, 317—319 HodgsonpetConjeeveram.